## தொண்ணூறு ஆண்டு

# சுதந்திர இயக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
11 JUL 1957
MADRAS

எஸ். ஏ. ரஹீம்

PIONEER PUBLISHERS

**பயோனீர் பப்ளிஷர்ஸ்**

கிளைவ்ஸ் ஹவுஸ்

தெப்பக்குளம், : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] : : [விலை அணா 15

இரண்டாம் பதிப்பு—1954

பயோனீர் பிரிண்டிங் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி.

CONNEMARA PUBLIC LIBRARY
11 JUL 1957
MADRAS

# முன்னுரை

இந்திய நாடு அடிமைத்தளையினின்றும் விடுபட்டுச் சுதந்திரம் அடைய அரும்பணியாற்றிய அரசியல் ஸ்தாபனம் **இந்திய தேசீய காங்கிரஸ்.** அதன் தோற்றம், வளர்ச்சி, தொண்டு முதலியவற்றைத் தெளிவாகச் சுருங்கிய முறையில் எடுத்துக் காட்டுவதே இந்நூல் ஆகும்.

சுதந்திரக் குடிமகனுகத் திகழும் ஒவ்வொருவரும் நம் நாடு விடுதலை பெற்ற வரலாற்றை அறிய வேண்டுவது இன்றியமையாத கடமை எனக்கொண்டு இந்நூல் வெளியிடப்பெறுகிறது.

**வெளியிடுவோர்.**

1 JUL 1957
MADRAS

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | சுதந்திர இயக்கத்தின் தோற்றம் | 1 |
| 2. | புரட்சித் தலைவர்கள் | 3 |
| 3. | தோல்வி ஏன் ? | 7 |
| 4. | புரட்சிக்குப் பின்னர்—? | 9 |
| 5. | காங்கிரஸ் மகாநாடுகள்—முதற் பகுதி | 13 |
| 6. | காங்கிரஸ் மகாநாடுகள்—இரண்டாம் பகுதி | 36 |
| 7. | காங்கிரஸ் மகாநாடுகள்—மூன்றும் பகுதி | 50 |
| | நாகபுரிக் கொடிப் போர் | 55 |
| | நீல் சிலை சத்தியாக்கிரகம் | 61 |
| | பர்தோலி இயக்கம் | 64 |
| 8. | காங்கிரஸ் மகாநாடுகள்—நான்காம் பகுதி | 67 |
| | உப்புச் சத்தியாக்கிரகம் | 68 |
| | கிராமக் கைத்தொழிற் சங்கம் | 74 |
| 9. | இறுதி எட்டு ஆண்டுகள் | 81 |
| | வெளிநாட்டில் இந்திய சுதந்திர இயக்கம் | 83 |
| 10. | விடுதலை வந்தது | 86 |

CONNEMARA PUBLIC LIBRARY
11 JUL 1957

# தொண்ணூறு ஆண்டு சுதந்திர இயக்கம்

## 1. சுதந்திர இயக்கத்தின் தோற்றம்

இமயமலைக்கும் குமரிமுனைக்கும் இடையேயுள்ள பண்புமிகுந்த நமது நாடு, பாரதியாரால் 'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்று பாராட்டப் பட்டுள்ளது. வந்தவர்களை வரவேற்று உள்ளன்போடு உணவு தந்து உபசரிக்கும் பண்பாட்டோடு, வாளுக்கு வாள், வில்லுக்கு வில், ஆளுக்கு ஆள் என்று போர் புரியும் ஆண்மை மிக்க வீரத்திறமையுங் கொண்டது இந்தப் பாரத நாடு. இது 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் நாளுக்கு முன்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக் குட்பட்ட அடிமை நாடாய் அவல நிலையில் ஆழ்ந்திருந் தது. இந்த நிலை மாறி நன்னிலை எய்துதற்குக் காரண மாயிருந்தது '**காங்கிரஸ்**' இயக்கம் என்பதை யாவரும் அறிவர். ஆயினும், 'காங்கிரஸ்' இயக்கம் தோன்றுவ தற்கு முன்னரே நமது நாட்டில் சுதந்திர இயக்கம் கருக் கொண்டிருந்தது என்பதற்குத் தக்க சரித்திரச் சான்றுகளும் உண்டு.

1857-ம் ஆண்டிலேயே உருவிய வாள்களோடு அன்னியர்களை விரட்ட இந்தியப் போர் வீரர்கள் கிளம்பிவிட்டனர். " இமயமுதல் குமரிவரை ஒரே நாடு ; இந்துக்களும், முஸ்லிம்களும் இந்தியர்கள் ; ஆங்கிலே யரின் ஆட்சி அன்னியர்களின் ஆதிக்கம் " என்று அவர் கள் எழுப்பிய குரலோசை வான முகட்டிடிற்பட்டு எதி ரொலியை உண்டாக்கிக்கொண்டிருந்தது. மொகலாய மாநில மன்னரும், பட்டமிழந்த குறுநில மன்னர்களிற்

சிலரும் இவ்வியக்கத்தில் நேரடியாகப் பங்கு கொண்டனர். அன்று மக்கள் உள்ளத்தில் உண்டான உணர்ச்சிப் பெருக்கையே **முதல் சுதந்திரப் புரட்சி** என்று நாம் கூறுகிறோம். ஆங்கிலச் சரித்திராசிரியர்கள் '**சிப்பாய்க் கலகம்**' என்று அதற்குப் பெயர் சூட்டிச் சரித்திர ஏடுகளில் நிலைபெறவும் செய்து விட்டனர்.

இந்தியப் போர் வீரர்களால் மேற்கொள்ளப்பட்ட அன்றைய இராணுவ நடவடிக்கை, அன்னிய ஆட்சியை அகற்ற வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் நடத்தப்பட்டதாகும். இஃது ஆங்கிலச் சரித்திராசிரியர்களாலும் மறுக்கமுடியாத உண்மை. அப்பொழுது இந்தியப் போர் வீரர்கள் வகுத்திருந்த திட்டம் ஒன்றே இவ்வுண்மைக்குப் போதிய சான்று பகரும்.

'குறிப்பிட்ட ஒருநாளில், நாடெங்குமுள்ள ஆங்கில அதிகாரிகள் யாவரையும் கொன்றுவிடுவது ; அரசாங்க நிதிச் சேமிப்புத் தலங்கள், வெடிமருந்துக் கிடங்குகள், ஆயுதசாலைகள் முதலியவற்றைக் கைப்பற்றிக்கொள்வது ; தந்திப் போக்குவரத்தையும் இதரப் போக்குவரத்து ஏற்பாடுகளையும் துண்டித்து விடுவது' ஆகிய இவைகளே அத்திட்டத்திலுள்ள முக்கிய அம்சங்களாகும். இவை ஏக காலத்தில் நிறைவேற்றப்படுமானால் ஆங்கில ஆட்சியின் கட்டுக்கோப்புக் குலைந்துவிடும் என்று இராணுவத்தினரும், புரட்சிக்குத் திட்டம் வகுத்த குறுநில மன்னர்களும் நம்பினார்கள்.

மேற்கண்ட திட்டம் நிறைவேறிய பின்னர் நாட்டு மக்களனைவரையும் புரட்சியில் ஈடு படுத்தவும் அவர்களிடம் திட்டமிருந்தது. வெற்றிக்கு மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதையும் அவர்கள்

உணர்ந்திருந்தனர். ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் புரட்சி செய்ய வேண்டியதற்குரிய காரணங்களைக் காட்டி ஓர் அறிக்கையும் அப்போது அவர்களால் வெளியிடப்பட்டது. மொகலாய இளவரசர் ஒருவரது கையொப்பத்தோடு அவ்வறிக்கை வெளியாயிற்று.

இத்தகைய முன்னேற்பாட்டுடன் அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட புரட்சியின் வாடை டில்லி, மீரத், ரோஹில்கந்த், ஆக்ரா, அலஹாபாத், வடமேற்கு மாகாணம், பாட்னா, சூடிய நாகபுரி, தெற்கு வங்கம், அயோத்தி, மத்தியப் பிரதேசம், பீஹாரின் மேற்குப் பகுதிகள் ஆகியவிடங்களில் வேகமாக வீசியது. தென் பகுதிகளைத் தவிர மற்றைய இடங்களிலும் சில சில்லறை இயக்கங்கள் நடந்தன.

புரட்சிக்காலத்தில் இந்து முஸ்லீம் வேற்றுமை தலைகாட்டாதிருக்கப் போதிய முயற்சிகள் செய்யப் பட்டன. அப்பொழுது ஆங்கிலேயர்கள் ஒற்றுமையைக் குலைக்கப் பல தந்திரங்களைக் கையாண்டனர். எனினும், அவர்களால் வெற்றிபெற இயலவில்லை.

## 2. புரட்சித் தலைவர்கள்

புரட்சி எப்படி மூண்டது, எவ்வாறு பரவிற்று ? என்பதைச் சுதந்திர நாட்டு விரிவான சரித்திரமே விளக்கமுடியும். ஆயினும், அதைப்பற்றிய பொதுவான சில உண்மைகளைத் தற்போது தெரிந்துகொள்வது அவசியமாகும்.

புரட்சிக்கான ஆரம்ப வேலைகளைத் திட்டமிட்டு ஆரம்பித்தவர்கள், பீஷ்வாப் பரம்பரையைச் சேர்ந்த **நானாசாஹிபும்** அவருடைய செயலாளர் **அஜிமுல்லாகானும்** என்றே தெரிகிறது. சிதறுண்டு கிடந்த புரட்சிச்

சக்திகளை உருவாக்கும் எண்ணத்தோடு, அவ்விருவரும் வட இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கின்றனர்கள். ஆங்கில அரசாட்சியின் மீது பொதுவாக மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியை ஒருமுகப்படுத்தி யாவரையும் சிந்திக்கச் செய்தது, இவர்களது சுற்றுப் பிரயாணமேயாகும்.

"நானாசாஹிப் நல்ல பண்புடையவர்; எதையும் ஆழ்ந்து சிந்திக்கக் கூடியவரல்லர்; சாதாரணமாக யாருடனும் நெருங்கிப் பழகும் தன்மையுடையவர்" என்றே ஆங்கிலேயர் அவரைப்பற்றி எண்ணியிருந்தனர். விருந்தோம்பலில் பெயர்பெற்றிருந்த இவர் புரட்சிக்கு முதல் ஆண்டில் பல ஆடம்பரமான விருந்துகளை நடத்தித் தாம் செய்துகொண்டிருந்த புரட்சிக்கான ஆரம்ப வேலைகளைப் பிறர் அறியாவண்ணம் மறைத்துவிட்டார். முன்யோசனையுடன் அரசாங்கக் கடன் பத்திரங்களாக இருந்த மூலதனங்களையெல்லாம் விற்று ஐம்பது லட்சம் ரூபாய் வரை, கையில் வைத்துக் கொண்டார். நானாசாஹிப் இவ்வளவு பெரிய புரட்சிக்கு வித்திடுவார் என்று ஆங்கிலேயர் கடைசி வரை எதிர்பார்க்கவே இல்லை. புரட்சி மூளும் தருவாயில்கூட ஆங்கிலேய கலெக்டர் இவரைக் கான்பூருக்கழைத்து அங்குள்ள அரசாங்க நிதிச் சேமிப்புத் தலத்தைப் பாதுகாக்குமாறு கேட்டுள்ளனர்.

இத்தகைய ஆங்கிலேயரின் நம்பிக்கைக்குரிய நானாசாஹிப் புரட்சிக்காரர்களின் தலைவராகத் திகழ்ந்தார்; அஜிமுல்லாகான் அவருக்கு ஆலோசகராக இயங்கிக் கொண்டிருந்தார். இந்த அஜிமுல்லாவின் வாழ்க்கையே

விசித்திரமானது. சமையற் பணியிலாரம்பமாகி இராஜ தந்திரியாக இவரது வாழ்க்கை முற்றுப் பெற்றது எனலாம். இவர் ஐரோப்பிய அதிகாரிகளிடம் வேலை பார்த்துவந்தபோது ஆங்கில, பிரஞ்சு மொழிகளைக் கற்றறிந்துகொண்டார். கடைசியாக நாஞசாஹிபின் தலைசிறந்த ஆலோசகரானார்.

கிழக்கிந்திய கம்பெனி டைரக்டர்களின் மன்றத்தில் நடந்த 'பீஷ்வா வழக்கை' நடத்த நானாசாஹிப் இவரை இலண்டனுக்கு அனுப்பிவைத்தார். இவரது சொல்வன்மையில் மிகுந்திருந்த நகைச்சுவையின் மெருகைக் கண்டு அநேக பிரபுக்களின் மனைவிமார்கள் இவரைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்தை நன்கு பயன்படுத்திக்கொண்ட இவரது மதிநுட்பம் போற்றுதற்குரியதாகும். ஆங்கிலேயர்கள் ஈடுபட்டிருந்த "கிரிமியப்" போர்முனைக்குச் சென்று அப் போர் வீரர்களின் ஆற்றலைப் பார்த்தறிந்தார். இவர் திரும்பும்போது துருக்கியிலும் ஆப்கானிஸ்தானத்திலும் தங்கி, இந்தியா புரட்சியிலீடுபட்டால் அந்நாடுகள் உதவுவதற்கான முயற்சிகளையும் செய்து வந்தார்.

புரட்சி இயக்க வீரர்களில் **மௌல்வி அஹமத்ஷா** என்பவரும் ஒருவர். இவர் பைஜாபாத்தைச் சேர்ந்த ஓர் இராஜதந்திரி; சிறந்த பேச்சாளர்; திறமையான இராணுவத் தலைவர். இவருடைய கனல்கக்கும் சொற்பொழிவுகள் அயோத்தியைக் கங்குகரை தெரியாத புரட்சிவெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டன. புரட்சியின் போது ஆங்கிலேயர் இவரைப் பிடித்து மரணதண்டனை விதித்துச் சிறையிலடைத்தனர். தூக்குக் கயிறு இவரை

எதிர்நோக்கிக்கொண்டிருந்த சமயம் சிறைக் கதவுகள் தகர்ந்தன; மக்கள் தலைவராகச் சிறையிலிருந்து இவர் வெளியேறினர்.

புரட்சியின் முக்கிய இராணுவத் தலைவர்களா யிருந்த **தாந்தியாதோபி, குமார்சிங், இராணி லட்சுமிபாய், மௌல்வி அஹமத்ஷா** என்ற நால்வரும் உறுதியுள்ள உள்ளம், உரங்கொண்ட நெஞ்சம், சுதந்திர வேட்கை, அளவு கடந்த ஆற்றல் ஆகிய எல்லாம் ஒருங்கே அமைந்தவர்களாயினும், போதிய யுத்த அனுபவமில்லா தவர்கள். ஆனால், ஆங்கிலப் படைத் தலைவர்களோ பயிற்சிபெற்ற நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள்.

ஆகையால், நேருக்கு நேர் நின்று நடத்திய ஒவ் வொரு போராட்டத்திலும் இந்தியர்களுக்குப் பெருந் தோல்வி ஏற்பட்டது. ஆனால், மறைந்து தாக்கும் புது முறைப் போரில் ஆங்கிலேயரை இந்தியர்கள் புறங் காட்டச் செய்தனர். அதனால்தான் 1857-ம் ஆண்டு மே-மாதம் முதல் அவ்வாண்டு நவம்பர் வரை புரட்சி நீடித்துக்கொண்டிருந்தது.

சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் புகழ் நாட்டிய பெண் மணி ஜான்ஸிராணி லட்சுமிபாய் என்பதை யாவரும் அறிவர். இவர் அழகும் ஆற்றலும் விவேகமும் ஒருங்கே பெற்ற வீரப் பெண்ணரசி; குதிரை மீதேறிப் போர்க் களம் புகுந்த பெண் சிங்கம்; இருபத்துநான்கு மணி நேரத்தில் நூற்று இரண்டு மைல் தூரம் ஒரே மூச்சில் குதிரைச்சவாரி செய்த வீர மங்கை; ஆண்வேடந் தாங் கிப் போரிடுகையில் மரணமெய்திய வீராங்கனை.

புரட்சியில் பங்குகொண்ட படைத் தலைவர்களில் வயது முதிர்ந்தவர் குமார்சிங் ஒருவரே. அவருக்கு அப்

போது வயது எண்பது. எனினும், கட்டிளங்காளைப் பருவமுள்ள தன் சகாக்கள் எவரும் இவரை எதிலும் மிஞ்சினதில்லை. இவர் பதுங்கித்தாக்கும் புதுமுறைப் போரில் வல்லவர்; இவர் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஜகதீசபுரியைக் கடும் போர்புரிந்து மீட்டு ஆங்கிலேயர்களுடைய கொடியைத் தாழ்த்திச் சுதந்திரக் கொடியை உயர்த்தினர். ஆத்திரங்கொண்ட ஆங்கிலேயர் அதிக பலத்தோடு மீண்டும் ஜகதீசபுரியைத் தாக்கியபோது அந்தோ! வீரப் புதல்வர் குமார்சிங்கின் சடலம் இரத்த வெள்ளத்தில் மிதந்தது.

இவ்வாறு புரட்சியிலீடுபட்ட படைத்தலைவர்கள் எல்லோரையும்பற்றிய விவரங்கள் சரிவர அறிதற்கு இல்லையாயினும், பெயர் தெரியாது, புகழடையாது, தியாக உணர்ச்சியோடு, போர்புரிந்து மாண்டவர் பல்லாயிரவராவர். ஆனல், அவர்கள் யாவரும் ஒவ்வொரு இந்தியனின் உள்ளத்திலும் அழியாது கோயில் கொண்டுள்ளனர்.

## 3. தோல்வி ஏன்?

எதிரிகளுக்கு நவீன விஞ்ஞான வசதிகளோடு முறையுடன் நிறுவப்பட்ட இராணுவம், போதிய அனுபவமுள்ள ஆங்கிலப் படைத்தலைவர்களைக் கொண்டதாக இருந்தது. சீன, கிரிமியப் போர்கள் அப்பொழுது தான் முடிவுபெற்றிருந்ததால் ஆங்கில இராணுவம் போர்க்கோலத்துடன் இருந்தது. பத்தொன்பதாவது நூற்றாண்டின் சாதனை என்று கருதப்பட்ட 'என்பீல்டு' நவீன துப்பாக்கிகள், இயந்திர பீரங்கிகள், முதலியவற்றுடன் அவற்றை உபயோகிக்கத் தெரிந்த போர் வீரர்கள் இங்கிலாந்திலிருந்து கப்பல் கப்பலாக வந்திறங்

னர். 1857-ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே பாரசீகத்தை ஆங்கிலேயர் தோற்கடித்திருந்தனர். மேலும் ஆப்கன் நாடுகளோடு நேச ஒப்பந்தம் அப்பொழுது தான் கையெழுத்தாகி யிருந்தது. கடலாதிக்கமும் ஆங்கிலேயரின் ஏகபோக உரிமையாயிருந்தது. ஆனால் புரட்சிக்காரர்களுக்கு வெளி உலகத்திலிருந்து எவ்வித உதவியும் கிடைப்பதற்கு வழியே இல்லை.

உள் நாட்டிலும் இலட்சக்கணக்கில் படைகளைத் திரட்ட நிதி வசதி ஆங்கிலேயருக்கிருந்தது. ஆங்கில வாணிபர்களான கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவை ஆட்சிபுரிந்து வந்தமையால் அவர்களது வற்றாத நிதியும் வெற்றிக்கு ஒரு பெருங்காரணமாயிருந்தது. அநேகமாக எல்லாக் குறுநிலமன்னர்களும் ஆங்கிலேயருக்கு உதவியாகயிருந்தார்கள் என்றே சொல்லலாம். வம்ச பரம்பரையற்றுவிட்ட சமஸ்தானங்களைப் புரட்சிக்கு முன் ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டனர். அதனால், குறுநில மன்னர்களிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்பைப் போக்கப் புரட்சி மூண்டவுடன் ஸ்வீகார உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. தன்னலம் ஒன்றையே கருதிவந்த குறுநிலமன்னர்கள் நவீன சாதனங்களைக்கொண்ட இராணுவத்தைக்கண்டு பயந்து ஆங்கிலேயர்களுக்குத் துணையாக நின்றனர்.

நிரந்தர நில ஏற்பாட்டை ஆங்கிலேயர் அமுலுக்குக் கொண்டுவந்ததன் மூலம் கடற்கரை மாகாணமான வங்காளத்தில் தங்களுக்குப் பக்கபலமாக இருக்க ஒரு பெரிய நிலப் பிரபுக்களின் கூட்டத்தை உண்டுபண்ணிக் கொண்டார்கள்.

புரட்சி இராணுவம் சுதந்திர வேட்கையில் உருவானது; எவ்வித நவீன வசதிகளும் இல்லாதது. ஆகையால், ஏககாலத்தில் எங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளச் சக்தியற்றிருந்தது. மேலும், பிளாஸ்ஸி யுத்தத்தின் நூற்றாண்டு விழாவான ஜூன் 22-ந்தேதி ஆரம்பிக்கப்பட வேண்டிய புரட்சி, மீரத்தில் மே-மாதம் பத்தாம் தேதியே மூண்டுவிட்டது. அதனால் புரட்சியின் திட்டம் ஆரம்பத்திலேயே நிலைகுலைந்தது. பக்குவமற்ற நிலையில் புரட்சி மூண்டதனால் ஒருவருக்கொருவர், ஒரு பக்கத்துக்கு ஒரு பக்கம் கடைசிவரை ஒத்துழைப்பு ஏற்பட வழி இல்லாமலேயே போய்விட்டது.

பட்டமிழந்த மன்னர்கள், கஷ்ட நிலையிலிருந்த பிரபுக்கள், உரிமையை இழந்து அதிருப்தியடைந்திருந்த குறுநிலமன்னர்கள் இவர்களின் ஆதரவையே புரட்சித் தலைவர்கள் பெரிதும் நம்பி யிருந்தார்கள். நிலையாயிருந்த குறுநிலமன்னர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நடத்திக்கொண்டிருந்த ஆங்கில ஆதிக்கத்தைக் களைந்தெறிய அந்தச் சிறு சக்தி போதவில்லை. மேலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களைப் புரட்சியிலீடுபடுத்தவும் முடியவில்லை. இவ்வித காரணங்களால் புரட்சியில் இந்தியர்களுக்கு வெற்றி கிட்டவில்லை.

## 4. புரட்சிக்குப் பின்னர்...?

புரட்சிக்குப் பின் நாட்டில் அடக்குமுறை கடுமையாக இருந்தது. அதனால், மக்களிடையே அச்சங் குடிகொள்ள ஆரம்பித்துவிட்டது. அதை ஆங்கிலேயர்களும் உணர்ந்தனர். அந்த நிலை நீடிப்பதை அவர்கள்

விரும்பவில்லை. அமைதியான சூழ் நிலையை உண்டாக்க வேண்டுவது அவசியமெனக் கருதி, அதற்கொரு வழியையும் கண்டுபிடித்தனர். கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி அதனால் முடிவுற்றது. இங்கிலாந்தின் அரசியான விக்டோரியாவின் நேரடியான ஆட்சி இந்தியாவில் ஆரம்பமாயிற்று. 1858-ம் ஆண்டு நவம்பர் முதல்தேதி இந்த விழா அலஹாபாத்தில் நிகழ்ந்தது. அதற்குப் பின்னர்தான் இங்கிலாந்தின் அரசியோ அல்லது அரசரோ இந்தியாவின் பேரரசியாகவும், பேரரசராகவும் ஆனார்கள். சரித்திரப் புகழ்பெற்ற பேரரசி **விக்டோரியாவின் சாஸனம்** அந்த விழாவில்தான் வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பு மக்களிடையே ஏற்பட்டிருந்த அச்சத்தை ஓரளவு போக்கிற்று.

ஆனால், பொருளாதாரச் சுரண்டல் மக்களின் சக்தியை மறைமுகமாக ஒடுக்கி வந்தது. நாட்டிலோ கடுமையான வறுமைநிலை பரவிக்கொண்டிருந்தது. சுமார் பதினேழு ஆண்டுகள் நீடித்திருந்த பஞ்சத்திற்கு இரையானவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய அரை கோடி இருக்கலாம்.

அடக்குமுறையும் பஞ்சமும் மக்களை ஆழ்ந்த சிந்தனைக்குள்ளாக்கின. தேசீய மொழிப் பத்திரிகைச் சட்டம், ஆயுதச் சட்டம் இவற்றின் மூலம் அரசாங்கம் மக்களின் உரிமைகளைப் பறித்தது. இவற்றின் எதிரொலியாக ஆங்காங்கே சதியாலோசனைகளும், சில்லறைப் பலாத்கார இயக்கங்களும் தலைகாட்டின. கட்டுப்பாடான மற்றொரு புரட்சிக்கு நாட்டு மக்கள் துணிந்து

விடுவார்களோ என்ற ஐயம் ஆங்கிலேயர்களுக்கு இல்லா மலில்லை. பலாத்கார இயக்கத்தினருக்குப் படித்த அறிஞர்களின் பின்னணி உதவி இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ளவும் உடனே முயன்றனர்.

இந்த வேலையில் முதலில் ஈடுபட்ட பெருமை **ஹியூம்** என்ற ஆங்கிலேயரையே சாரும். இவர் ஒரு



பெரிய அதிகாரியாயிருந்து அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்த திறமைசாலி. 1882-ம் ஆண்டில் அவ்வேலையிலிருந்து விலகிக்கொண்டார். அரசாங்கம் அவருக்குப் பென்ஷன் கொடுத்தது. அவர் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து நிலைமையைப் பரிசிலனை செய்துகொண்டிருந்தார். இந்தச் சமயத்தில், படித்த அறிஞர்கள் சிலர் கூடினார்கள், அந்தக் கூட்டத்திற்கு **அகில இந்திய தேசீய மகாநாடு** என்று பெயர் சூட்டப்பட்டது. அதற்குத் தலைமை வகித்தவர் வங்காளத்தைச் சேர்ந்த **ஆனந்த மோஹன் போஸ்** என்பவராவர். அந்த மகாநாடு குறிப்பிடத்தகுந்த தீர்மானம் எதையும் செய்யவில்லையாயினும், அகில இந்திய அடிப்படையில் கூட்டம் கூடும் பழக்கத்துக்கு வித்திட்டு வைத்தது. இந்தியர்களிடையே இனி பலாத்கார எண்ணம் உண்டாகாமல் தடுப்பதற்கு இந்த நடவடிக்கை ஆங்கிலேயருக்கு ஒரு நம்பிக்கை யூட்டுவதாயிருந்தது. பலாத்கார இயக்கத்தில் ஈடுபடும் எண்ணத்தை மாற்றிக் கூட்டங்கூடித்தீர்மானங்கள்மூலம் தங்கள் தேவைகளைக்

கேட்கும் மனப்பான்மை யுடையவர்களாக இந்தியர்களை மாற்றும் முயற்சியில் ஏற்கனவே இறங்கியிருந்த ஹியூமிற்கு அந்தத் தேசியமகாநாடு உற்சாகத்தையூட்டியது. இதற்குப் பின்னர்தான் அகில இந்தியாவுக்குமாக ஒரு நிரந்தர ஸ்தாபனம் உண்டுபண்ணலாமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று.

உடனே ஹியூம் சிம்லாவுக்குச் சென்று அப்போது இராஜப்பிரதிநிதியாயிருந்த **லார்டு டப்ரினைச் சந்தித்துத்** தம் எண்ணத்தை வெளியிட்டார். குளிர்ச்சியான மலை வாசஸ்தலமான சிம்லாவில் இரண்டு ஆங்கில இராஜதந்திரிகளுமாகச் சேர்ந்து செய்த முடிவின் பயன்தான் **காங்கிரஸின் பிறப்பு** ஆகும்.

வடகோடியிலுள்ள சிம்லா சிகரத்திலிருந்து தெற்கே சென்னைவரையில் ஹியூம் பிரயாணம் செய்தார். சென்னையில் அறிஞர் பலரைக் கூட்டி ஆலோசித்தார். அக்கூட்டத்தின் முடிவுப்படி பதினேழு பேர்களின் கையொப்பத்தோடு ஒரு சுற்றறிக்கை நாடெங்கும் அனுப்பப்பட்டது. 1885-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந் தேதி அதன்படி முதல் **இந்திய தேசீய காங்கிரஸ்** பம்பாயில் கூடிற்று.

# 5. காங்கிரஸ் மகாநாடுகள்

## முதற்பகுதி 1885—1906

### முதல் காங்கிரஸ் 1885

இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தது 1885-ம் ஆண்டேயாகும். இந்த ஆண்டில்தான் இந்திய தேசீய காங்கிரஸ் உதயமாயிற்று. பம்பாய் நகரத்தில் நடைபெற்ற அதன் முதல் கூட்டத்திற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் எழுபத்திரண்டு பிரதிநிதிகள் வந்திருந்தனர்.



**உமேஷ்சந்திர பானர்ஜி** அதற்குத் தலைமை வகித்தார். வங்காளத்தைச் சேர்ந்த கீர்த்திபெற்ற வழக்கறிஞராகிய இவர் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் நீதிபதி பதவியை ஒரு சமயம் அரசாங்கத்தார் அளிக்க முன் வந்தபொழுது அதை ஏற்றுக்கொள்ள மறுத்த பெரியாராவர். இவர் தம் தலைமை உரையில் "நாட்டின் எல்லாவிடங்களிலுமுள்ள உண்மை ஊழியர்கள், சாதி, சமய, மாகாண வேற்றுமைகளை அகற்றித் தேசீய ஒற்றுமையை வளர்க்கவும், இந்திய மக்களின் எண்ணங்களை ஒருமுகமாக உருவாக்கி வெளிப்படுத்தவும் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படுகிறது" என்று தெளிவாக எடுத்துக் கூறினார்.

முதன் முதலாக அகில இந்திய மக்களின் தொடர்புடன் நிறுவப்பட்ட தேசீய காங்கிரஸின் இந்தக் கூட்

டத்தில் பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'இந்திய ஆட்சி முறையை விசாரிக்க, இந்தியர்களும் அடங்கிய ஒரு '**ராயல் கமிஷன்**' நியமிக்கப்பட வேண்டும். இங்கிலாந்திலிருக்கும் இந்திய ஆலோசனை சபை கலைக்கப்பட வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட மாகாண, மத்திய சட்டசபைகள் அமைக்கப்பட்டு, நிர்வாகக் குழுவினரால் கொண்டுவரப்படும் திட்டங்களையும் வரவு செலவுக் கணக்குகளையும் பரிசீலனை செய்யும் அதிகாரம் அவற்றிற்குக் கொடுக்கப்பட வேண்டும். சட்டசபை நிறைவேற்றும் தீர்மானங்களை நிர்வாகக்குழு நிராகரிக்கும்போது பெரும்பான்மை அங்கத்தினர்கள் அம்முடிவை ஆட்சேபிக்கும் நிலைமை ஏற்பட்டால் அதை விசாரிக்கப் பார்லிமெண்ட் அங்கத்தினர்களைக்கொண்ட நிரந்தரக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். ஐ. ஸி. எஸ். பரீட்சை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் நடத்தப்பட வேண்டும். இராணுவச் செலவு குறைக்கப்படவும், இறக்குமதித் தீர்வை உயர்த்தப்படவும் வேண்டும்.'

இவை யாவும் அரசாங்கத்தைக் கேட்குந் தீர்மானங்களாகச் செய்தவையாகும்.

## இரண்டாவது காங்கிரஸ்—1886

இந்தக் காங்கிரஸ் கல்கத்தாவில் கூடிற்று. நானூற்று முப்பத்து நான்கு பிரதிநிதிகள் வந்திருந்தனர். பம்பாய்மாகாணத்தைச் சேர்ந்த **தாதாபாய் நௌரோஜி** தலைமை வகித்தார். இவர் இலண்டன் சர்வகலாசாலையில் சிலகாலம் குஜராத்தி மொழிப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். பல நூல்களை இயற்றிய அறிஞராகிய இவர் பத்திரிகாசிரியராகவும் இருந்திருக்கிறார். இங்கிலாந்தின் பார்லிமெண்டில் அங்கம் வகித்த பெருமையும் இவருக்குண்டு.



"அரசியல் பிரச்னைகளில் மட்டும்தான் காங்கிரஸ் தலையிடவேண்டும். சாதி, சமயப் பிரச்னைகளை அதனதன் சபைகளே கவனித்துக் கொள்ளவேண்டும். தற்பொழுது வேறு எங்கும் காணமுடியாத அளவுக்கு நாட்டில் வறுமை மேலிட்டிருக்கிறது. அதைப்போக்க உடனே வழிசெய்வது அவசியமாகும். இல்லையேல் ஆங்கில ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகள் யாவும் அழிந்துவிடும்."

"இந்நிலையில் நாட்டின்மீது சுமத்தப்பட்டிருக்கும் அன்னிய ஆட்சியினால் ஏற்படும் பெருஞ் செலவுகளை ஈடுசெய்யப் புதிய வரிகள் போடப்படுமானால் மக்கள் வெறுப்படைவர். அதனால் நடைபெறும் ஆட்சிக்கும்

விபத்துநேரிடும். இந்தியாவுக்கு நன்மை ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் ஆங்கிலேயருக்கு உண்டு. உரத்தக்குரலில் விடாமுயற்சியுடன் நமது தேவைகளைக் கேட்டுக்கொண்டிருப்போமானால் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லாமல் போய்விடாது," என்று நௌரோஜி நிகழ்த்திய தலைமையுரையில் குறிப்பிட்டார்.

பின்கண்ட குறிப்பிடத்தக்கப் பிரச்னைகளைப் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரரசி விக்டோரியாவின் ஐம்பதாண்டு அரசாட்சிக்கு நிறைவிழா வாழ்த்துக் கூறப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை நிலையைப்போக்க பிரதிநிதித்வ ஆட்சியினால்தான் முடியுமென்பதைக் குறிப்பிட்டு, அதற்கான முதல் காங்கிரஸின் தீர்மானத்தை நினை ஊட்டி வற்புறுத்தப்பட்டது. 'மாகாண, மத்திய சட்ட சபைகளில் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதோடு குறைந்த அளவு பாதி அங்கத்தினர்களாவது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கச் செய்யவேண்டும். தாமாகச் சிந்தித்து வாக்குரிமையைப் பயன்படுத்தக்கூடிய எல்லா வகுப்புக்களுக்கும், வாக்குரிமை அளிக்கப்படவேண்டும். ஏற்படும் எந்த விதிகளும் நாட்டிலுள்ள எல்லா வகுப்புகளுக்கும் திருப்தியளிக்கக் கூடியவைகளாக இருக்க வேண்டும். நாட்டின் தற்காப்புப்படை இந்தியர்களைக் கொண்டே பெருக்கப்பட வேண்டும். நீதி, நிர்வாக இலாக்காக்கள் தனித் தனியே பிரிக்கப்பட வேண்டும்.

## மூன்ருவது காங்கிரஸ்—1887

உலகத்தின் இரண்டாவது அழகிய கடற்கரையை யுடைய சென்னையில் மூன்ருவது காங்கிரஸ் நடை பெற்றது. அறுநூற்றேழு பிரதிநிதிகள் வந்திருந்தனர்; மூவாயிரம் பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த **பத்ருத்தீன் தயாப்ஜி** தலைமை வகித்தார். இவர் பம்பாய் சட்டசபை அங்கத்தினராகவும், முஸ்லீம் கல்விச் சபையின் தலைவராகவும், பம்பாய் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும் இருந்து தொண்டாற்றியிருக்கிருர்.



இவர் நிகழ்த்திய தலைமையுரையில், கடந்த ஆண்டுகளில் நடந்த காங்கிரஸ் கூட்டங்களில் முஸ்லீம்கள் கலந்துகொள்ளாமைக்கு வருத்தம் தெரிவித்தார். இந்து, முஸ்லீம், பார்ஸி, கிருஸ்துவர் என்ற வேறுபாடின்றிப் பொதுநலத்திற்குப் பாடுபடும் காங்கிரஸில் மக்கள் சேர்ந்து தொண்டாற்றவேண்டுமென வேண்டிக்கொண்டார். நாட்டிலுள்ள படித்த அறிஞர் கூட்டத்தை இராஜத்துரோகக் கண்கொண்டு ஆட்சியாளர்கள் நோக்கினுல் அதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டியது அரசாங்கமேயொழிய அறிஞர்களல்லர் என்ருர். படித்தக் கூட்டத்தினர்தாம் ஆங்கில ஆட்சிக்கு மூலபலமானவர்கள் என்று தெளிவுபடக் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் காங்கிரஸுக்கென அமைக்கப் பட்ட பந்தலில் சபை கூடிற்று. காங்கிரஸுக்குச் சட்ட திட்டங்களைத் தயாரிக்க ஒரு குழூஉ நிறுவப்பட்டது. முதலிரண்டு காங்கிரஸ்களில் நிறைவேறிய அடிப் படைத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

நாட்டின் வறுமையைப் போக்கத் தொழிற்கல்வி அவசியமென்றும், உயர்தர இராணுவப் பதவிகளை இந்தியர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், இராணுவ கலாசாலைகளைத் துவக்கவேண்டுமென்றும், ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ளவர் களுக்கு வருமானவரி விதிக்கக்கூடாதென்றும், ஆயுதச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தஞ்சையைச் சேர்ந்த மூக்கன் ஆசாரி என்ற தொழிற் கலைஞர் இந்தக் காங்கிரஸில் தொழிற்கல்வியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். வந்திருந்த காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குச் சென்னை கவர்னர் லார்டு கன்னிமாரா, வழக்கறிஞர் நார்ட்டன், இராஜா இராம சாமி முதலியார் ஆகிய இவர்கள் விருந்தளித்தனர்.

**நான்காவது காங்கிரஸ்—1888**

நான்காவது காங்கிரஸ் அலஹாபாத்தில் கூடிற்று, ஆயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டுப் பிரதிநிதிகளும்,

ஐயாயிரம் பார்வையாளர்களும் பங்குகொண்டனர். கல்கத்தாவைச் சேர்ந்த ஆங்கில வணிகர் **ஜார்ஜ் யூல்** என்பவர் தலைமை வகித்தார். சில நாட்கள் இங்கிலாந்திலிருந்த காங்கிரஸ் கிளை ஸ்தாபனத்தின் மூலம் இவர் தொண்டாற்றியுள்ளார்.



இவர் தம் சொற்பொழிவில், "எங்களைப் பிணைத்துள்ள கட்டுகளைத் தகர்க்க வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை; கொஞ்சம் தளர்த்த வேண்டுமென்றே கேட்கிறோம். அன்புள்ள வைத்தியனால் எங்கள் கண்கள் நாளடைவில் குணப்படுத்தப்படும் என்பதை நாங்கள் அறிவோம்; அதற்காக நீண்ட நாள் இருட்டறையில் அடைபட்டிருக்கவும் சம்மதிக்கிறோம். ஆனால் எங்கள் கண்பார்வைக்குத் தக்கபடி கொஞ்சம் திரையை விலக்குங்கள் என்றுதான் வேண்டுகிறோம். முழு ஒளியையும் பார்க்க எங்கள் கண்களுக்குச் சக்தியில்லையென்று உணரும் அளவு அறிவு எங்களுக்கிருக்கிறது. அன்புள்ளவர் என்று நாங்கள் கருதும் வைத்தியர், நீண்டநாள் இருட்டறையிலேயே இருக்க வேண்டுமென்று எங்களை வற்புறுத்தினால், வைத்தியரின் நல்லெண்ணத்தின்மீதே எங்கட்குச் சந்தேகமுண்டாவது இயல்பு. அப்போது வைத்தியரைக் குறை கூறுவதோடு அவருடைய சேவையிலும் அதிருப்தியுண்டாகும்" என்று அரசாங்கத்தாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்தக் காங்கிரஸ் கூடுவதை ஸர். சையத் அஹமத்கானும், இராஜா சிவப்பிரஸாதும் எதிர்த்தார்கள். அவர்கள் எதிர்த்ததற்குத் தக்க காரணங்களுமுண்டு. காங்கிரஸின் விறுவிறுப்பான தீர்மானங்களையும், சொற்பொழிவுகளையும் கண்டு, இராஜப் பிரதிநிதி லார்டு டப்ரின் சந்தேக மனப்பான்மையோடு "காங்கிரஸ் இயக்கம் இராஜத்துரோக இயக்கம்" என்று வாய்விட்டுச் சொல்ல ஆரம்பித்தார். அன்றியும் சென்னையில் நடந்த காங்கிரஸில் பங்குகொண்ட ஒருவரிடமிருந்து எவ்வித காரணமுமில்லாமல் இருபதாயிரம் ரூபாய்க்கு நன்னடத்தை ஜாமீன் வாங்கப்பட்டது. பாஞ்சாலத்திலுள்ள ஒரு ஜில்லாவிலிருந்து மட்டும் ஐநூறு பேர்களிடம் நன்னடத்தை ஜாமீன் கேட்கப்பட்டது. இவ்வித அரசாங்க நடவடிக்கைகளால் அச்சங்கொண்டு அவ்விருவரும் எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வித எதிர்ப்பு நிலையில் மகாநாடு ஆரம்பமாயிற்று.

சென்ற காங்கிரஸின் முக்கிய தீர்மானங்கள் யாவும் மீண்டும் வற்புறுத்தப்பட்டன. வளர்ந்துவரும் குடிப்பழக்கத்தையும், இலாகிரி வஸ்துக்களின் உபயோகத்தையும் தடுக்க அரசாங்க நடவடிக்கை அவசியம் என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. உப்பு வரியின் உயர்வைக் கண்டித்தும், போலீஸ் நிர்வாகத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. போலீஸ் நிர்வாகத்தைப்பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்த முன்ஷி ஸஜ்ஜாத் ஹுசேன் பேசுகையில் "போலீஸாரால் திருடர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களைக் காட்டிலும் நிரபராதிகளான பாமர மக்களுக்கு அதிக கஷ்டங்கள் உண்டாகின்றன. வீட்டில் களவுபோன துயரத்தைக்

காட்டிலும் போலீஸார் அதை விசாரிக்கும்போது ஏற்படும் துன்பம் அதிகமாயிருக்கிறது" என்று விவரித்தார். இவ்வாண்டு ஹியூம் காங்கிரஸின் செயலாளரானார்.

## ஐந்தாவது காங்கிரஸ்—1889

பம்பாய் நகரத்தில் இரண்டாவது தடவையாக ஐந்தாவது காங்கிரஸ் நடைபெற்றது. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது பிரதிநிதிகளும், ஆறாயிரம் பார்வையாளர்களும் வந்திருந்தனர். சர். **வில்லியம் வெட்டர்பன்** தலைமை வகித்தார். இவர் ஜில்லா நீதிபதியாகவும் இருபது வருஷங்களுக்கு மேல் வேலை பார்த்தவர். பின்னர்



வேலையை விட்டு விலகி காங்கிரஸை உருவாக்கும் அலுவல்களை மேற்கொண்டிருந்த ஹியூமுடன் ஒத்துழைத்துக்கொண்டிருந்தார். பல நூல்களையும் இவர் இயற்றியிருக்கிறார். பிற்காலத்தில் உதயமான முஸ்லீம் லீகிற்கும் காங்கிரஸிற்கும் உண்டான வேற்றுமைகளைப் போக்குவதற்கும் இவர் பெரிதும் உழைத்தார்.

இவர் நிகழ்த்திய தலைமையுரையில் "இந்திய அதிகாரவர்க்கத்தின் எண்ணம், வரி செலுத்துவோரின் நன்மைக்கு மாறாக இருக்கிறது. நம்முடைய இன்றைய நிர்வாகம் அமைதியைக் காக்கவோ, சிக்கன வாழ்வைப் புகுத்தவோ பாடுபடுமென்று எதிர்பார்க்க முடியவில்லை.

"விவசாயி நீதியுடன் நடத்தப்பட்டிருந்தால் இன்றைய பட்டினி நிலை ஏற்பட்டிராது. அவன் நல்ல உழைப்பாளியாக மாறியிருப்பான். இன்று அவனை வருத்திக்கொண்டிருக்கும் கடன் சுமை நீக்கப்படுமானல் வளமான நிலங்களில் உழைத்து விவசாயம் செய்து இந்தியாவை ஒரு பொன்னுலகமாக அவன் மாற்றி அமைத்துவிடுவான்" என்று குறிப்பிட்டார். இந்தக் காங்கிரஸிற்குப் பார்லிமெண்ட் அங்கத்தினர் சார்லஸ் பிராட்லா வந்திருந்தார். இனப் பாகுபாட்டையோ, தேசப் பாகுபாட்டையோ தாம் விரும்பவில்லையென்றும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கான சீர்திருத்தச் சட்டத்தைப் பார்லிமெண்டில் கொண்டுவரப்போவதாகவும் வாக்களித்துப் பிரசங்கம் செய்தார்.

நாணயச் செலாவணியைப்பற்றி விவாதித்து, வெள்ளித் தகட்டின் மேலுள்ள வரியை நீக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் காங்கிரஸின் பூர்வாங்க ஆலோசனைக்குழுவில் முதன் முதலாகக் கோகலே, திலகர் பெயர்கள் முதன்மை பெற்றன.

## ஆருவது காங்கிரஸ்—1890

கல்கத்தாவில் இரண்டாவது முறையாக ஆருவது காங்கிரஸ் கூடியது. எழுநூற்றிரண்டு பிரதிநிதிகளும், எண்ணுயிரம் பார்வையாளர்களும் பங்குகொண்டனர். பம்பாயைச் சேர்ந்த **வழக்கறிஞர் சர். பிரோஸ்ஷா மேத்தா** தலைமை தாங்கினர். இவர் மாகாண, மத்திய சட்டசபைகளில் அங்கத்தினராயிருந்தவர்; இந்திய

மத்திய பாங்கியையும், 'பம்பாய் கிராணிக்கிள்' பத்திரிகையையும் ஆரம்பித்த பெரியார்.

தமது தலைமையுரையில் இவர், "நமது எண்ணங்களும் கோரிக்கைகளும் பிறருடைய கேலிக்குள்ளாகின்றன. விசுவாசமற்ற இராஜத்துரோகிகள் என்ற குற்றமும் நம் மேல் சாட்டப்படுகிறது. நம்முடைய கருத்துக்கள் வெளியாகும் மொழி ஒருக்கால் தெளிவில்லாமலிருக்கலாம்; ஆனால், அவை முன்னேறும் ஒரு நாட்டின் உள்ளத்து வெளியீடு ஆகும்" என்று முழங்கியுள்ளார்.



அரசாங்க ஊழியர்கள் வேடிக்கை பார்க்கக்கூட காங்கிரஸுக்குப் போகக் கூடாதென அரசாங்கம் ஒரு சுற்றறிக்கை விடுத்து இவ்வாண்டு காங்கிரஸிற்கு எதிராக நடவடிக்கையிலிறங்கியது. இவ்விதச் சூழ்நிலையில் நடைபெற்ற இந்தக் காங்கிரஸ் ஒரு அறிக்கையைத் தயாரித்து உமேஷ்சந்திர பானர்ஜியையும், சுரேந்திரநாத் பானர்ஜியையும் இங்கிலாந்துக்கு அனுப்பிக் காங்கிரஸின் கோரிக்கையை எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்தது.

நிரந்தர நிலவரி ஏற்பாட்டை நாடெங்கும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று முக்கியத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஏழாவது காங்கிரஸ்—1891

இவ்வாண்டு நாகபுரியில் காங்கிரஸ் கூடிற்று. ஆந்திர நாட்டு வழக்கறிஞர் **அனந்தாச்சார்லு** தலைமை வகித்தார். இங்கிலாந்தின் பிரதம மந்திரி கிளாட்ஸனின் எண்பத்திரண்டாவது ஆண்டு நிறைவுக்கு ஆசி கூறும் முறையில் முதன் முதலில் வாழ்த்தொலிகள் மும்முறை எழுப்பப்பட்டன.



"எது சரியோ அதை எடுத்துக்காட்டித் தவருக உள்ளவற்றைக் கண்டிப்பதோடு நாம் தற்பொழுது திருப்தியடைய வேண்டும். அதனுல் நம் வழித்தோன்றல்கள் பயனடைவர். மக்களோடு அதிகம் கலந்து பழகித் தேசீயத்தை வளர்ப்பது நமது கடமையாகும்" என்று தலைமையுரையில் அவர் வற்புறுத்திஞர்.

இந்தக் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட இராணுவச் செலவைப்பற்றிய தீர்மானத்தைப் பாலகங்காதர திலகர் முன்மொழிந்தார்; கோகலே அதனை வழி மொழிந்தார்.

## எட்டாவது காங்கிரஸ்—1892

அலஹாபாத்தில் இரண்டாம் முறையாகக் கூடிய இக் காங்கிரஸிற்கு **உமேஷ்சந்திர பானர்ஜி** தலைமை வகித்தார். அவர் தலைமையுரையில், "நியாயம் கிடைக்கும் வரையில் நாம் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும்" என்று கடமையை உணர்த்திஞர்.

*1892-ம் ஆண்டு இந்திய சட்டசபைச் சட்டத்தை லார்டு கிராஸ் பார்லிமெண்டில் கொண்டுவந்ததற்கு நன்றி தெரிவித்தும், அச் சட்டத்தின் நடைமுறைக்குரிய துணைவிதிகள் மாறுபட்ட மனோபாவத்தோடு சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

**ஒன்பதாவது காங்கிரஸ்—1893**

*இக் காங்கிரஸ் லாகூர் நகரத்தில் இரண்டாவது தடவையாகத்* **தாதாபாய் நௌரோஜியின்** *தலைமையில் கூடிற்று. அவர் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டதாவது :*

*" ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் வறுமை என்பது பலமான எதிரியாகும். இருவரும் அதனைப் போக்க முயற்சியின்றி இருந்தால் அதனால் ஏற்படும் பேராபத்தைத் தடுக்கமுடியாது. சாதி, சமய, வகுப்பு வேறுபாடின்றி இந்தியன் என்ற ஒரே உணர்ச்சியோடு தொண்டுபுரிய உறுதிகொள்வதே நமது உடனடித் தேவையாகும். ஒரு நாள் வரும்; அந்நாள் வெகு தூரத்திலில்லை. அன்று இந்நாட்டு மக்கள் தங்களுடைய உரிமையை அடைந்தே தீருவார்கள்."*

**பத்தாவது காங்கிரஸ்—1894**

*இவ்வாண்டு காங்கிரஸ் சென்னையில் இரண்டாவது முறையாக* **ஆல்பிரட் வெப்** *தலைமையில் கூடிற்று.*



*இவர் அயர்லாந்து சுதந்திரப் போரில் பெரும் பங்குகொண்டவர்; நௌரோஜி, உமேஷ் சந்திர பானர்ஜி ஆகியவர்களின் வற்புறுத்தலின்பேரில் இந்தியாவுக்கு வந்தவர்.*

*" அடக்கியாளப்படுவதும், கொடுங்கோன்மையும் எங்கு*

நடந்தாலும் அவற்றை நான் வெறுப்பவன். அடிமைப் பட்டு வாழ்வதில் உள்ள துன்பத்தை நான் என் சொந்த நாட்டிலேயே அனுபவிக்கிறேன். மதுபானம், விப சாரம் இவையிரண்டும் உங்கள் நாட்டில் மேனாட்டு நாகரிகம் புகுத்திய இழிவான விளைவுகளாகும். "கண்டோன்மெண்ட் சட்டத்தின்" மூலம் ஐரோப் பியப் போர்வீரர்கள் விபசாரம்செய்ய வசதிகள் செய்து கொடுத்தது ஈனச் செய்கையாகும். அபின் பயிரை இங்கு வளரச் செய்ததும் அதைச் சீன நாட்டினர்மீது சுமத்தியதும், அவர்கள் அதை உண்ணும்படியான பழக்கத்தை உண்டாக்கியதும் மன்னிக்கமுடியாத கொடுஞ்செயல்கள் ஆகும்" என்று அவர் நிகழ்த்திய தலைமையுரையில் உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டார்.

இலங்காஷயர் ஆலை முதலாளிகளின் தூண்டுதலைக் கொண்டு இந்திய ஆலைத்தொழில் வளர்ச்சி குன்றும் வகையில் வரி விதிக்கப்படுவதைக் கண்டித்தும், பத்திரிக்கை வாய்ப்பூட்டுச் சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பதினொன்றாவது காங்கிரஸ்—1895

இவ்வாண்டு காங்கிரஸ் பூனாவில் கூடிற்று. இதற்குச் **சுரேந்திரநாத் பானர்ஜி** தலைமை வகித்தார். இவர்



வங்காளத்தின் தலைசிறந்த பேச்சாளராவார். வங்கப் பிரிவினையை எதிர்த்தவர்களில் இவர் முதன்மையானவர்; "மாண்டேகு-செம்ஸ்போர்டு" சீர்திருத்தங்களுக்கு உடன்பட்டு வங்க அரசாங்க மந்திரி பதவி ஏற்றவர்.

'உத்தியோகங்களில் அன்னியரை அமர்த்தும் அறிவற்ற செயலால் நமது நாட்டுப் பொருளாதாரம் குன்றும் என்றும், 'அரசியல் சீர்திருத்தங்களை உடனடியாகச் செய்யாது தாமதிப்பது பலாத்காரத்துக்கு விதையூன்றுவது போன்றதாகும்' என்றும் தம் தலைமை உரையில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

## பன்னிரண்டாவது காங்கிரஸ்—1896

கல்கத்தாவில் இவ்வாண்டு கூடிய காங்கிரஸிற்கு **முஹம்மத் ரஹமதுல்லா சஹானி** தலைமை வகித்தார். இவர் பம்பாய் நகர சபைத் தலைவராகவும், மாகாண, மத்திய சட்ட சபைகளின் அங்கத்தினராகவுமிருந்து பொதுத் தொண்டாற்றியுள்ளார். இவர் தம் தலைமை உரையில் முஸ்லீம்கள் அதிகமாகக் காங்கிரஸில் சேர வேண்டும் என்று தம் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.



பேரரசி விக்டோரியாவின் அறுபதாம் ஆண்டு விழாவுக்கு வாழ்த்துக் கூறிய தீர்மானத்தோடு பம்பாய், சென்னை மாகாண நிர்வாக சபைகளில் இந்தியர்களையும் நியமிக்கவேண்டுமென்ற தீர்மானமும் இக்காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது.

## பதின்மூன்றாவது காங்கிரஸ்—1897

இவ்வாண்டு காங்கிரஸ் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த அம்ரோட்டியில் கூடிற்று. சென்னையில்

வழக்கறிஞராகவும், அட்வகேட் ஜெனரலாகவும், உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் பணி புரிந்த, கேரளத்தைச் சேர்ந்த **சங்கரன் நாயர்** இதற்குத் தலைமை வகித்தார்.



இவர் இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபை அங்கத்தினராக இருந்தபோது 'பஞ்சாப் படுகொலை' நடந்தது. அவ்வநீதியை இவர் கண்டித்ததுடன் தமது பதவியையும் விட்டு விலகிவிட்டார். பிற்காலத்தில் இவர் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டித்து 'காந்திஜியும் அராஜகமும்' என்ற ஒரு நூல் எழுதியுள்ளார்.

"மக்களின் இன்றைய வறுமை நிலைக்கு அரசாங்கமே பொறுப்பாளியாகும். இந் நிலையில் இந்தியாவிற்குத் தேவையில்லாத படையெடுப்புகளுக்கு இந்நாட்டின் பணத்தைச் செலவிடுவது அநீதியாகும். அதிகாரிகளின் கள்ளச் சிரிப்பில் மயங்கியோ அல்லது கோபப் பார்வைக்குப் பயந்தோ நமது கடமைகளை விட்டுவிடக் கூடாது" என்று தமது தலைமை உரையில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டில் திலகர் இராஜத் துரோகக் குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்டார். பலர் நாடு கடத்தப்பட்டனர். பூனாவில் ஆயுதப் போலீஸ் நிறுவப்பட்டது. அடக்குமுறைக்கான சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. இவைபோன்ற அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்தும், பம்பாய், சென்னை,

வங்காளம் ஆகிய இடங்களில் அமுலிலிருந்த "ஒழுங்கு முறைச் சட்டம்" நீக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பதினான்காவது காங்கிரஸ்—1898**

சென்னையில் மூன்றும் முறையாக இவ்வாண்டு காங்கிரஸ், வங்காளத்தைச் சேர்ந்த **ஆனந்த மோஹன் போஸ்** தலைமையில் கூடிற்று. இவர் இஞ்சினியரிங் கல்லூரியில் கணக்காசிரியராகச் சிலகாலம் வேலை பார்த்தவர்; வங்க சட்ட சபை அங்கத்தினராகவும், பிரும்ம சமாஜத்தின் தலைவராகவும் இருந்தவர்.



"தியாகமின்றி முன்னேற்றமில்லை என்ற மனோ நிலை நம்மிடையே வளர்க்கப்படவேண்டும்" என்று இவர் நிகழ்த்திய சொற்பொழிவில் அறிவுறுத்தினார்.

**பதினைந்தாவது காங்கிரஸ்—1899**

இலட்சுமணபுரியில் இவ்வாண்டு கூடிய காங்கிரஸுக்கு **இரமேச சந்திர தத்தர்** தலைமை தாங்கினார். தத்தர் அரசாங்கத்தில் பெரிய அதிகாரியாயிருந்து விலகியவர். வங்க இலக்கியத்தின் சரித்திரத்தை எழுதிய இப் பேரறிஞர் ருக் வேதத்தையும் மொழிபெயர்த்திருக்கிறார். 'புராதன இந்தியாவின் நாகரிகம்' என்ற நூலையும்



இவர் இயற்றியுள்ளார். இலண்டன் சர்வகலாசாலையில் பேராசிரியராகவும், பரோடா குறுநில மன்னரின் நிர்வாக அதிகாரியாகவும் இருந்திருக்கின்றார்.

"குடிசைத் தொழில்களை அழித்து நிலவரியை உயர்த்தியதே தற்போதைய கடுமையான பஞ்சத்திற்குரிய காரணங்கள். மூவாயிரம் ஆண்டுகளாகக் கிராம ஆட்சிமுறை இருந்த நமது நாட்டைச் சுதந்திரம்பெறத் தகுதியற்ற நாடு என ஆங்கிலேயர்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது" என்று தத்தர் தமது தலைமை உரையில் கூறினார்.

இராஜப்பிரதிநிதி லார்டு கர்சான் சுதந்திர இயக்கத்தை அடக்குவதற்குரிய சட்டங்களை இயற்றியதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## பதினாறுவது காங்கிரஸ்—1900

இவ்வாண்டில் லாகூரில் கூடிய காங்கிரஸிற்கு **சந்தாவர்க்கர்** தலைவராக இருந்தார். வழக்கறிஞராகவும், 



உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாகவும், இந்தூர் குறுநில மன்னரின் நிர்வாக அதிகாரியாகவுமிருந்த சந்தாவர்க்கர், பம்பாய் சட்டசபை அங்கத்தினராகவும், அதன் அவைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். "மாண்டேகு—செம்ஸ்போர்டு" சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்ட இவர், "இந்து பிரகாஷ்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்திருக்கின்றார்.

"பம்பாய் தொழிற்சாலைகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிக்கொள்கை நீடிக்கும்வரையில் இந்தியக்

கம்பெனிகள் ஐரோப்பியக் கம்பெனிகளுடன் போட்டி யிட முடியாது. இவ்வாட்சி முறை சீர்திருந்துமாறு உழைப்பது காங்கிரஸின் கடமையாகும்" என்று தம் தலைமையுரையில் இவர் குறிப்பிட்டார்.

தென்னுப்பிரிக்காவிலுள்ள நெட்டாலுக்குப் போவதற்குரிய தடைகளையும், அங்குள்ள இந்தியர்கள் தொழில் செய்வதைத் தடுக்கும் சட்டங்களையும் நீக்க வேண்டும் என்பதுபோன்ற தீர்மானங்கள் இக் காங்கிர ஸில் நிறைவேறின.

### பதினேழாவது காங்கிரஸ்—1901

பம்பாய் பஞ்சாலை முதலாளியான **தீன்ஷா எதுல்ஜி வாச்சா**வின் தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடிற்று. எதுல்ஜிவாச்சா மாகாண, மத்திய சட்டசபைகளில் அங்கத்தினராகவும், இம்பீரியல் பாங்கியின் கவர்னராகவும் இருந்தவர். இவர் பிற்காலத்தில் காங்கிரஸிலிருந்து விலகி மிதவாதிகள் மகாநாட்டிற்கும் தலைமை தாங்கியுள்ளார்.



"அரசாங்க நிதி குவிந்துகொண்டிருப்பதால் கிராம மக்கள் சுகவாழ்வு வாழ்கிறார்கள் என்று நினைப்பது விவேகமற்ற எண்ணமாகும். வறுமையில் வாடும் மக்களை ஆளும் அரசாங்கம் கண்மூடித்தனமாக நிர்வாகச் செலவைச் செய்வது விரும்பத்தக்கதல்ல. அஃது ஒன்றே இதனைப் பொறுப்பற்ற அரசாங்கம் என்று

நிரூபிக்கத்தகுந்த சான்ருகும்'' என்று தம் தலைமையுரையில் விளக்கிக்காட்டினர்.

மகாத்மா காந்தி முதன் முதலாகக் கலந்துகொண்டது இந்தக் காங்கிரஸில்தான். இதில் காந்திஜி தென்னுப்பிரிக்க இந்தியர் சம்பந்தமான தீர்மானத்தை முன்மொழிந்து பேசினர்.

**பதினெட்டாவது காங்கிரஸ் —1902**

இவ்வாண்டு காங்கிரஸ் அலஹாபாத்தில் **சுரேந்திரநாத் பானர்ஜி** தலைமையில் கூடிற்று. "அவநம்பிக்கை வீரர்களின் ஆயுதமல்ல; அது சக்தியற்றவர்களின் ஆயுதமாகும். பிறந்த நாட்டு மக்களை ஒன்று திரட்டுவதில் நமது உறுதி தளராமலிருக்குமானல் வெற்றி கிடைக்காமல் போகாது'' என்று அவர் நிகழ்த்திய தலைமையுரையில் மொழிந்துள்ளார்.

இராணுவச் செலவைக் குறைக்க விரும்பும் தீர்மானம் இக் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

**பத்தொன்பதாவது காங்கிரஸ் —1903**

சென்னையில் கூடிய இந்தக் காங்கிரஸிற்கு **லால் மோஹன் கோஷ்** தலைமை வகித்தார். இவர் கல்கத்தாவில் சிறந்த வழக்கறிஞராயிருந்தவர். இங்கிலாந்துக்குச் சென்று இரண்டு தடவை பார்லிமெண்ட் தேர்தலில் நின்று தோற்றவர். இவர் நல்ல பேச்சாளரும், பல நூல்களை இயற்றிய எழுத்தாளருமாவார்.



"பணம் படைத்தவர்களுக்குப் பட்டங்கள் வழங்கி அவர்களை ஆங்கில அர

சாங்கம் தனக்கடிமைகளாக்கிக் கொள்ளுகிறது. இங்கிலையில் நாம் பாமர மக்களின் சக்தியைத் திரட்டு வதில் வெற்றியடைய வேண்டும். டில்லி தர்பாருக்கு அரசாங்கம் செலவழித்துள்ள தொகையில் பாதியை யாவது பஞ்சநிவாரண வேலைகளுக்குச் செலவழித்திருந் தால் இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களை மீட்டி ருக்கலாம்'' என்று இவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

ஆங்கில அரசாங்கம் கடைப்பிடித்துவரும் இராணு வக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தும் இராணு வச் செலவில் தனது பங்கை இங்கிலாந்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறை வேறின.

## இருபதாவது காங்கிரஸ்—1904

இந்தியாவில் பிறந்த ஆங்கிலேயரான **சர் ஹென்றி காட்டன்** தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் பம்பாயில் கூடிற்று. வங்க மாகாண அர சாங்கப் பிரதம செயலாளராக வும், அஸ்ஸாம் மாகாண பிரதம கமிஷனராகவும் ஹென்றி காட் டன் இருந்திருக்கிறார். "புது இந்தியா'' என்ற புத்தகத்தை எழுதியவரும் இவரேயாவர். இராஜப் பிரதிநிதியாக இருந்த



லார்டு கர்சானுக்கும் இவருக்கும் உள்ள கொள்கை வேறுபாடுகளே இவர் கவர்னராவதைத் தடுத்தன. இந்தியாவிற்கு "சமஷ்டி'' அரசாங்க முறை தகுதியான

தென்று முதன்முதலில் கூறியவர் இவரே. பிற்காலத்தில் பார்லிமெண்ட் அங்கத்தினராகவும் இவர் இருந்திருக்கிறார்.

"முயற்சியில் தளர்ந்துவிடாதீர்கள். சில்லறை வேறுபாடுகளும், பொறுமையும் உங்கள் முயற்சியைச் சீர்குலையச் செய்துவிடும். சிறிது காலமே முன்னேற்றத்தை மனித சக்தியினால் தடைசெய்ய முடியும். எக்காலத்தும் அது நீடித்துக் கொண்டிருக்காது" என்று அவர் அறிவுறுத்திச் சொற்பொழிவாற்றினார்.

வங்காளப் பிரிவினை யோசனையைக் கைவிடுமாறு வற்புறுத்திய தீர்மானம் நிறைவேறிற்று.

## இருபத்தோன்றுவது காங்கிரஸ்—1905

இவ்வாண்டு நடைபெற்ற காங்கிரஸ் **கோபாலகிருஷ்ண கோகலே** தலைமையில் காசியில் கூடிற்று. கோகலே மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்; கல்லூரிப் பேராசிரியராகவும், மாகாண, மத்திய சட்டசபைகளின் அங்கத்தினராகவும் இருந்திருக்கிறார். தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னைகளில் அதிக அக்கறை காட்டியவர். மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவி லிருந்தபோது அங்குச் சென்று அவரைப் பார்த்துவிட்டு வந்தார்.



"இந்தியாவில் இராணுவ நலன், அதிகார வர்க்க நலன், மூலதனம் படைத்த முதலாளிகள் நலன் இவைகளுக்கே மக்கள் நலனைவிட முக்கியத்துவம் ஆட்சியினரால் காட்டப்படுகிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டை

அடக்கியாள்வதால் ஆத்மிகத் துறையில் வளர வேண்டியசிந்தனைசக்தியே அழிந்துவிடுகிறது; முயற்சி குன்றிவிடுகிறது: வறுமை மேலோங்குகிறது" என்று தமது தலைமைப்பேச்சில் கோகலே குறிப்பிட்டார்.

இங்கிலாந்து இளவரசர் இந்தியாவுக்கு வரும் போது அவரைப் புறக்கணிப்பதன்மூலம் இந்தியரது வெறுப்பைத் தெரிவிக்க வேண்டுமென லாலா லஜபதிராயும், திலகரும் இக் காங்கிரஸில் வற்புறுத்திப் பேசினார்கள். கோகலேயும், சுரேந்திரநாத் பானர்ஜியும் அதை எதிர்த்தனர். கடைசியில் இளவரசரை வரவேற்ப தெனத் தீர்மானம் நிறைவேறியது.

வங்காளப் பிரிவினையைக் கண்டித்ததோடு அதை உடனே நீக்கவேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்தி யும், ஆங்கில நாட்டுப் பொருள்களை வாங்கக்கூடா தென்று மக்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

காங்கிரஸின் கோரிக்கைகளை எடுத்துக்கூற கோகலேயை இங்கிலாந்துக்கு அனுப்ப முடிவுசெய்யப் பட்டது. இந்த ஆண்டில்தான் முஸ்லிம் லீக் ஆரம்ப மாயிற்று.

## இருபத்திரண்டாவது காங்கிரஸ்—1906

காங்கிரஸிற்குள் தீவிரவாதிகள் மிகுந்துகொண் டிருந்தார்கள். அவர்களை எதிர்க்க மிதவாதிகளும் தங்களைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். அதற் காகவே இவ்வாண்டு காங்கிரஸிற்குத் தலைமை வகிக்க இங்கிலாந்திலிருந்த **தாதாபாய் நௌரோஜி** அழைக்கப்பட்

டார். அவருடைய தலைமையில் காங்கிரஸ் கல்கத்தா வில் கூடிற்று.

"எந்த இயக்கத்திலும் நாம் இறுதிவரை போராட வேண்டும்; சோர்வு ஏற்படலாம்; ஆனால் போராட் டத்தை நிறுத்திவிடக் கூடாது. சுய ஆட்சி என்ற நமது கொள்கை மிகவும் நியாயமானது. அஃதில்லாத கார ணத்தால் நமது தொழில், செல்வம், அறிவு இம் மூன்றையும் அன்னியர்கள் கொள்ளை கொண்டு போகின்றனர். இராணுவச் செலவு ஆங்கில ஏகாதி பத்தியம் விரிவடைவதற்கே செய்யப்படுகிறது. ஆனால் ஏழை இந்தியன் அதன் சுமையைச் சுமக்கின்றான். அச் சுமையுடன் வாழும் அவன் தனது எதேச்சாதி காரத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டுமென்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது" என்று நௌரோஜி நிகழ்த்திய தலைமையுரையில் கூறினார்.

---

## 6. காங்கிரஸ் மகாநாடுகள்

### இரண்டாம் பகுதி—1907—1919

### இருபத்துமூன்றுவது காங்கிரஸ்—1907

இவ்வாண்டு, காங்கிரஸின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி நாகபுரியில் கூடவேண்டிய காங்கிரஸ் தீவிர, மிதவாதிகளிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக அங்குக் கூடாமல் சூரத்தில் கூடிற்று.

சுய ஆட்சி, சுதேசி இயக்கம், அன்னியப்பொருள் புறக்கணிப்பு, தேசீயக்கல்வி இவை சம்பந்தமான தீர்மானங்கள் பூர்வாங்க ஆலோசனைக் குழுவில் வரப் போவதில்லை யென்ற வதந்தி, நடவடிக்கைகளுக்கு முன்பே பரவிவிட்டதால் பிரதிநிதிகளிடையே ஒரு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வரவேற்புக் கழகத்தலைவர் தம் சொற்பொழிவை முடித்துக்கொண்டு தலைமைவகிக்க **ராஷ் பிஹாரி கோஷின்** பெயரை முன்மொழிந்தபோது "கூடாது, கூடாது" என்று சிலர் ஆட்சேபித்தனர். இந் நிலையில் சுரேந்திர நாத் பானர்ஜி அதனை வழிமொழிய எழுந்தார். அவர் பேச்சைக் கேட்க முடியாதபடி கூச்சல் மிகுந்தது. இதைக் கண்டு வரவேற்புக் கழகத் தலைவர், கூட்டம் மறுநாள் நடைபெறுமென அறிவித்தார்.



அடுத்தநாள் கூட்டம் ஆரம்பமாயிற்று. ராஷ் பிஹாரி கோஷின் தலைமையை ஆதரித்து பானர்ஜி சொற்பொழிவாற்றினர். அவரைப் பின்பற்றிப் பண்டித மோதிலால் நேரு பேசியபிறகு, ராஷ்பிஹாரி கோஷ் தலைமை ஆசனத்தில் அமர்ந்தார். அப்போது திலகர் மேடைக்கு வந்து ஏதோ பேச ஆரம்பித்தார். அதைப்பற்றிப் பிரதிநிதிகள் ஆங்காங்கே விவாதிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில் தடிக் கம்புகளோடு மேடையை நோக்கிக் கூட்டம் ஒன்று வந்தது. குழப்பம் எல்லையை

மீறிற்று. உடனே போலீஸார் தலையிட்டுக் கூட்டத்தைக் கலைத்தனர். ஆகவே, காங்கிரஸ் இவ்வாண்டில் நடைபெறவில்லை.

நாடெங்கும் காங்கிரஸ்காரருள் மிதவாதி, தீவிரவாதி என்ற பிளவு உண்டாகிவிட்டது. தீவிரவாதிகளுக்குத் திலகரே தலைமைதாங்கினர். தமிழ்நாட்டைச் சார்ந்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி ஆகியோர் திலகரின் தலைமையிலுள்ள தீவிரவாதிகள் கூட்டத்திலிருந்தனர்.

## மீண்டும் இருபத்துமூன்றுவது காங்கிரஸ்—1908

குழப்பத்தில் கலைந்த சூரத் காங்கிரஸின் தொடர்ச்சிக் கூட்டமாக சென்னையில் இவ்வாண்டு காங்கிரஸ் கூடிற்று. ராஷ் பிஹாரி கோஷே தலைவராயிருந்தார். இவர் வங்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞராவார்; சட்டசபை அங்கத்தினராகவுமிருந்தவர்.

“போராட்டத்தில் தோல்விகள் உண்டு. ஆனல், அத்தோல்விகள் நமக்கு அவமானத்தை உண்டாக்கிவிட மாட்டா. பின்வாங்க வேண்டிய காலமும் வரலாம்; அதைக் கேவலமாகக் கருதிவிடக் கூடாது. ஆங்கில அதிகாரிகளைத் திருப்தி செய்வதற்காக இந்திய நலன்களைப் பலியிட்டுவிட்டார் லார்டு கர்சான்” என்று அவர் நிகழ்த்திய தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வரப்போகும் சீர்திருத்தங்கள் எப்படிப்பட்டவை என்று தெரிந்துகொள்ளாமலே அவற்றை வரவேற்றதோடு, சுதேசி இயக்கம், தேசியக் கல்வி இவற்றைப் பற்றிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## இருபத்துநான்காவது காங்கிரஸ்—1909

**மதன்மோஹன் மாளவியா**வின் தலைமையில் லாகூரில் இக் காங்கிரஸ் நடைபெற்றது. மாளவியா உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞராவார். இவர் மத்திய சட்ட சபையில் அங்கத்தினராக இருந்தவர்; ரவுலட் சட்டத்தை ஆட்சேபித்து அங்கத்தினர் பதவியை விட்டு விலகினவர்; இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டவர்; இந்துமகா சபையின் தலைவராகவும் இருந்தவர்; காசி சர்வகலாசாலையை ஆரம்பித்தவர். இரண்டாவது காங்கிரஸில் கலந்துகொண்ட இவர் 1945-ம் ஆண்டுவரை நம்மிடை வாழ்ந்திருந்தார்.



"கல்வியில்லாத காரணத்தால் மக்கள் பல இன்னல்களுக்காளாகிறார்கள். கட்டாய ஆரம்பக் கல்வியே எல்லாவித முன்னேற்றங்களுக்கும் அடிப்படையாகும்" என்று தம் தலைமைப் பேச்சில் இவர் வற்புறுத்தியுள்ளார்.

"மிண்டோ-மார்லி" சீர்திருத்தங்கள் இவ்வாண்டில்தான் வெளியாயின. சிறுபான்மையோருக்குச் சலுகை என்ற பெயரில், இந்து முஸ்லிம் வேற்றுமையாகிய வித்து அத்திட்டத்தில் விதைக்கப்பட்டிருந்தது. முதல் சுதந்திரப் புரட்சியின் அடக்குமுறைகளால் ஆங்கிலேயரின்மீது முஸ்லீம்களுக்கு ஏற்பட்டிருந்த கசப்பைப் போக்குவதற்கு ஆங்கிலேயர் இவ்வுபாயத்

தைக் கையாண்டனர். பிற்கால அரசியலில் இந்து முஸ்லீம் வேற்றுமை மேலோங்கியதற்கு ஆங்கிலேயரின் இத்தகைய பிரித்தாளும் கொள்கையே மூலகாரணம் என்பதை நாம் உணரவேண்டும். ஆங்கிலேயரின் இந்த மனோநிலையைக் காங்கிரஸ் கண்டித்தது.

## இருபத்தைந்தாவது காங்கிரஸ்—1910

மிண்டோ-மார்லி சீர்திருத்தம் விதைத்த விதை, ஓர் ஆண்டுக்குள் முளைத்து நன்கு வளர்ந்து மரமாகவும் ஆகிவிட்டது. தேர்தலில் வகுப்புவாதம் புகுந்து கொண்டது. இந்து முஸ்லீம் வேற்றுமை பகிரங்கமாகத் தேர்தலில் தலைகாட்டிவிட்டதால் இந்தக் காங்கிரஸிற்குத் தலைமை வகிக்க **சர் வில்லியம் வெட்டர்பர்ன்** இங்கிலாந்திலிருந்து அழைத்தனர். தலைமை வகித்த வெட்டர்பன் நாட்டில் ஒற்றுமை நிலவவேண்டிய அவசியத்தை வற்புறுத்தித் தம் தலைமை உரையை நிகழ்த்தினர்.

ஸ்தலஸ்தாபன நிர்வாகங்களிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும், தனித்தொகுதித் தேர்தல் முறையையும் கொண்டுவர இந்த ஆண்டில் ஏற்பாடாயிற்று. தனித் தொகுதி முறையையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கண்டித்து முஹம்மதலி ஜின்னு இக் காங்கிரஸில் சொற்பொழிவாற்றினர்.

## இருபத்தாறுவது காங்கிரஸ்—1911

இவ்வாண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸிற்கு **பண்டித பிஷன் நாராயண்தார்** தலைமை வகித்தார். வழக்கறி

ஞராகிய இவர் நல்ல எழுத்தாளராவார். மோதிலால்நேரு, தேஜ்பஹதூர் சாப்ரு ஆகியவர்களால் பெரிதும் போற்றப்பட்ட பேரறிஞரு மாவார். இவர் வங்க சட்ட சபை அங்கத்தினராகவும்தொண் டாற்றியுள்ளார்.



"எவன் வகுப்புவாதத்தைக் கிளப்புகிருனே அவன் மக்களின் விரோதியாவான். தேசீய ஒற்று மையைக் குலைப்பவனும் அவ னேயாவான். எவன் மூச்சில் கிளர்ச்சியின் அனல் வீசுகிறதோ, மக்களின் துன்பத்தைக் காணச் சகியாது எவன் துள்ளித் துடிக்கின்ருனே, நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்காமல் எவன் முன்னேக்கிச் செல்கின் ருனே, புயலுக்கொப்பான வாழ்க்கையிலிருந்து எவன் மீளுகின்ருனே, தனது என்றில்லாமல் யாவற்றையும் துறக்க எவன் முன்வருகின்ருனே அவன்தான் இன்றைய நிலையில் இந் நாட்டுத் தலைமைப் பதவிக்குத் தகுதியுள்ளவன் ஆவான்" என்று இவர் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினர்.

இவ்வாண்டு முதல் டில்லி இந்தியாவின் தலைநகர மாயிற்று; வங்கப் 'பிரிவினையும் நீக்கப்பட்டது. சர். வில்லியம் வெட்டர்பனும், ஆகாகானும் இந்து முஸ்லீம் வேற்றுமையைப் போக்க முயற்சி செய்தனர்.

**இருபத்தேழாவது காங்கிரஸ்—1912**

பங்கிப்பூரில் இந்தக் காங்கிரஸ் கூடிற்று. பீராரைச் சேர்ந்த முதோல்கார் தலைமை வகித்தார். பீராரில் நடந்த

பல பொதுவேலைகளில் பங்குகொண்டு உழைத்த இவர், "சமூக முன்னேற்றம், ஆத்மீக வளர்ச்சி இவையிரண்டும் இன்றி அரசியலில் முன்னேற முடியாது என்று தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.



இவ்வாண்டில் ஹியூம் காலமானார். இராஜப் பிரதிநிதியின் மீது வெடிகுண்டு வீசப்பட்டதைக் கண்டித்தும், இராணுவத்தில் உயர்ந்த அலுவல்களிலிருக்கும் இந்தியர்களை நீக்குவதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

## இருபத்தெட்டாவது காங்கிரஸ்—1913

இக் காங்கிரஸ் கராச்சியில் சென்னையைச் சேர்ந்த **நவாப் சையத் மஹ்மூத்** தலைமையில் கூடிற்று. நாட்டின் அலுவல்களில் ஈடுபடும்போது சில்லறைச் சச்சரவுகளை மறந்து தியாக மனப்பான்மையோடு ஈடுபடும்படி இவர் தம் தலைமையுரையில் இந்து முஸ்லீம்களைக் கேட்டுக்கொண்டார்.



சுயாட்சித் தீர்மானத்தை முஸ்லீம் லீகும் நிறைவேற்றியதை இக் காங்கிரஸ் பாராட்டியது.

## இருபத்தொன்பதாவது காங்கிரஸ்—1914

முதல் உலக மகா யுத்தம் ஆரம்பமான இவ்வாண்டில் காங்கிரஸ் சென்னையில் கூடிற்று. வங்க நாட்டு




வழக்கறிஞர் **பூபேந்திரநாத் பாஸு** தலைமை வகித்தார். சென்னை கவர்னர் இக் காங்கிரஸிற்கு வந்திருந்தார். அவர் வந்தபோது எல்லோரும் எழுந்து நின்று அவரை வரவேற்றனர்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இங்கிலாந்துக்கு எல்லா உதவிகளையும் செய்வதாக வாக்களித்துத் தனது இராஜ பக்தியைக் காங்கிரஸ் வெளிப்படுத்திக் கொண்டதுடன் மக்கள் போரில் பங்குகொள்ள இராணுவப் பள்ளிகளை நிறுவ வேண்டுமென்றும் அரசாங்கத்தை வேண்டிக் கொண்டது.

## முப்பதாவது காங்கிரஸ்—1915

பம்பாய் நகரத்தில் இவ்வாண்டு காங்கிரஸ் **சத்தியேந்திர பிரசன்ன சின்ஹா** தலைமையில் கூடிற்று.



சின்ஹா வழக்கறிஞராகவும் அரசாங்க அட்வகேட் ஜெனரலாகவும் அலுவலாற்றியவர். இவர் இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் அங்கம் வகித்த முதல் இந்தியராவார். கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியரும் இவரேயாவார். ஆங்கிலேயர் இவருக்கு “லார்டு” பட்டத்தை வழங்கியதோடு உதவி இந்தியா மந்திரிப்பதவியும் அளித்தனர்.

இந்திய அரசாங்க மசோதாவை லார்டு சபையில் கொண்டுவந்த பெருமையும் இவருக்கு உண்டு. இவர் வங்காளத்தைச் சேர்ந்தவர்.

இவருடைய தலைமைச் சொற்பொழிவில், அப்ரஹாம் லிங்கன் சொன்னதைப்போன்று **மக்களால் மக்களுக்காக, மக்களாட்சி** ஏற்பட வேண்டுமென்ருர். ஆனுல், நாம் அதற்குத் தகுதியுள்ளவர்களாக இல்லாதிருப்பின், மனமுவந்து ஆங்கிலேயரே சுயாட்சி கொடுத்தாலும் அது பயன்படாதென்றும், சுதந்திர இந்தியா போதிய தற்காப்புடனிருந்தாலன்றி இந்த நவீன உலகத்தில் மீண்டும் அடிமையாவதிலிருந்து தப்ப முடியாதென்றும் அழுத்தமாக எடுத்துரைத்தார்.

தீவிரவாதிகள் காங்கிரஸிற்குள் வர இருந்த தடைகளை இக் காங்கிரஸ் நீக்கிவிட்டது. உடனே திலகர் தம் கூட்டம் காங்கிரஸில் சேர்ந்து பணியாற்றுமென அறிவித்தார்.

### முப்பத்தொன்ருவது காங்கிரஸ்—1916

வங்க வழக்கறிஞர் **அம்பிகா சரண் மஜும்தார்** தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் இலட்சுமணபுரியில் கூடிற்று.



“எந்த ஆசாளுலும் போதிக்கப்படாத, இதயத்திலிருந்து கிளம்பும் துடிப்புதான் நாட்டுப் பற்று. அதன் வளர்ச்சிதான் தியாகம். அஃதின்றி எதையும் சாதிக்க இயலாது. கடலில் கலந்த நீர்த்துளி தன் தனித்தன்மையை இழப்பதைப்

போன்று தன்னலம் தன் தனித்தன்மையை அழித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கோட்பாடே பலரை ஒன்ருக்குகிறது. இதைச் சாதிப்பதில் சோர்வு கூடாது. அது தோல்வியின் அறிகுறி'' என்று தலைமைதாங்கிய மஜூம்தார் நல்லதோர் சொற்பொழிவாற்றினர்.

'இந்தியா மந்திரி சபை' கலைக்கப்பட்டு, சட்ட சபைக்குட்பட்ட மத்திய நிர்வாக சபை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று காங்கிரஸ் உருவாக்கியிருந்த திட்டத்தை இலட்சுமணபுரியில் கூடிய முஸ்லீம் லீகும் ஏற்று நிறைவேற்றியது.

சூரத் காங்கிரஸிற்குப் பிறகு திலகர் மீண்டும் காங்கிரஸ் நடவடிக்கைகளில் இவ்வாண்டு பங்குகொண்டார். "ஹோம் ரூல் லீகை'' பூனவில் திலகரும் சென்னையில் பெசண்ட் அம்மையாரும் ஆரம்பித்துச் செயலாற்ற முற்பட்டனர்.

### முப்பத்திரண்டாவது காங்கிரஸ்—1917

கல்கத்தாவில் இவ்வாண்டு கூடிய காங்கிரஸிற்கு **அன்னி பெசண்ட் அம்மையார்** தலைமை வகித்தார். இவர் பல பத்திரிக்கைகளை நடத்தினவர்; அரசாங்கத்தின் பலவித அடக்குமுறைகட்கும் ஆளானவர்; ஹோம்ரூல் கிளர்ச்சியை ஆரம்பித்து நடத்தியவர். "மாண்டேகு-செம்ஸ் போர்டு'' சீர்திருத்தங்களை ஆதரித்த இவர் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை




எதிர்த்தார். ஆனல் 1927-ம் ஆண்டில் பூரண சுதந்திரத் தீர்மானத்தை ஆதரித்தார்.

இவர் நிகழ்த்திய தலைமை உரையில் "மண்டியிட்டுப் பிச்சை கேட்கும் நிலையில் இந்தியா இன்று இல்லை; தலை நிமிர்ந்து உரிமை கேட்கும் நிலையில் அது முன்னேறி இருக்கிறது" என்று குறிப்பிட்டார். இந்தக் காங்கிரஸில் ஹோம் ரூல் கொடி உயர்த்தப் பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சி. பி. இராமசாமி அய்யர் இவ்வாண்டில் காங்கிரஸின் செயலாளராக இருந்தார்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாயிருந்து ஓய்வு பெற்றிருந்த சர். சுப்பிரமணிய அய்யர் தம் சர். பட்டத்தைத் திருப்பியனுப்பிவிட்டுச் சுயாட்சிக் கிளர்ச்சியில் பங்குகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## முப்பத்துமூன்றுவது காங்கிரஸ்—1918

இவ்வாண்டு பம்பாயில் நடைபெற்ற இவ் விசேஷ காங்கிரஸிற்கு **ஹஸன் இமாம்** தலைமை தாங்கினர். வழக்கறிஞரான இவர் கல்கத்தா உயர்நீதி மன்ற நீதிபதியாகவும், அலிகார் சர்வகலாசாலையின் தர்மகர்த்தாவாகவும் இருந்தவர். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக முறையை ஆதரித்தவர்.



"ஆங்கிலேயர் சட்டபூர்வமாகக் கொள்ளையடிக்க, கொடுங்கோன்மையை அப்படியே சட்டமாக்கி அதை இந்தியாவில் நடவடிக்கைக்குக் கொண்டுவந்திருக்கின்

றனர்" என்று ஆங்கில ஆட்சியைப்பற்றித் தம் தலைமை உரையில் சுருக்கமாக வர்ணித்தார்.

மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் திருப்தியளிக்கக் கூடியனவாக இல்லையென்றும் "காங்கிரஸ்—லீக்" திட்டந்தான் பொருத்தமானதென்றும் இவ்விசேஷ காங்கிரஸ் சீர்திருத்தங்களைப் பற்றிய தன் எண்ணத்தை வெளியிட்டது.

## முப்பத்துநான்காவது காங்கிரஸ்—1918

இவ்வாண்டின் இறுதியில் வழக்கம்போல் காங்கிரஸ் டில்லியில் கூடிற்று. **மதன்மோஹன் மாளவியா** தலைமையேற்றார். "ஆங்கிலேயன் தன்மதிப்போடு எப்படி இங்கிலாந்தில் வாழ்கின்றானோ அதேபோன்று நீங்களும் உங்கள் நாட்டில் வாழும் உரிமையை நிலை நாட்டுங்கள்" என்று தம் தலைமைப் பேச்சின்போது கேட்டுக்கொண்டார்.

அலி சகோதரர்களையும், இதர பாதுகாப்புக் கைதிகளையும் விடுதலை செய்ய இக் காங்கிரஸ் வற்புறுத்தியுள்ளது.

## "ரவுலட்" சட்டம்

உலக மகாயுத்தத்தின்போது இந்தியா பொருளையும் உயிரையும் இங்கிலாந்துக்குக் கொடுத்துதவியதை மறந்தனர் ஆங்கிலேயர். "இரகசிய இயக்கங்கள்" "சதியாலோசனைகள்" இந்தியாவில் மறைமுகமாக உருவாகிக்கொண்டிருக்குமோ என ஐயுற்று ரவுலட் என்பவனது தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தனர். இதன் பயனாக உருவானதே **ரவுலட் சட்டம்**. இதைச் சட்டசபைப் பிரதிநிதிகள் மறுத்தனர். நாடே

மறுத்தது. ஆட்சியாளர் பிடிவாதத்தால் அதைச் சட்டமாக்கினர். மகாத்மா காந்தி இராஜப்பிரதிநிதிக்கு இது குறித்து விண்ணப்பித்தும் பயனேற்படவில்லை.

## பஞ்சாப் படுகொலை—1919

மகாத்மா காந்தி விரும்பியவாறு " சத்தியாக்கிரக நாள் " கொண்டாட்டம் ஏப்ரல் மாதத்தில் நாடெங்கும் கொண்டாடப்பட்டது. அதைப் பாஞ்சாலம் சிறப்பாகக் கொண்டாடிற்று. அதற்காக அமிர்தசரஸில் ஜாலியன் வாலா தோட்டத்தில் கூடிய கூட்டத்தை இயந்திர பீரங்கிகளால் சுட்டு இரத்தவெள்ளத்தில் மிதக்கவிட்டனர் ஆங்கில ராணுவ வெறியர்கள். இத் துக்ககரமான நிகழ்ச்சிதான் பஞ்சாப் படுகொலையெனக் குறிப்பிடப்படுகிறது.

## முப்பத்தைந்தாவது காங்கிரஸ்—1919

அமிர்தசரஸில் இவ்வாண்டு **மோதிலால் நேரு** தலைமையில் காங்கிரஸ் கூடிற்று. மோதிலால் நேரு, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேருவின் தந்தையாவார். இவர் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திலீடுபட்டுப் பன்முறை சிறை சென்றவர்; சைமன் கமிஷன் புறக்கணிப்பு, வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்பு, உப்புச் சத்தியாக்கிரகம் ஆகிய இயக்கங்களைத் தலைமை தாங்கி நடத்தியவர்.



சட்டசபைப் பிரவேச எண்ணங்கொண்ட சுய ராஜ்யக் கட்சியைப் பிற்காலத்தில் சி. ஆர். தாஸுடன் சேர்ந்து ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் இவரும் ஒருவர்; மத்திய சட்டசபை அங்கத்தினராகவும் இருந்தவர். அலகாபாத்தில் தமக்குச் சொந்தமான "சுயராஜ்ய பவனம்" என்ற மாளிகையை இவர் காங்கிரஸுக்குக் கொடுத்து உதவியுள்ளார்.

"சுதந்திர மில்லா நாட்டில் செய்யப்படும் சீர்திருத் தங்கள் பிணத்துக்குப் பட்டாடை உடுத்துவதற்கொப் பாகும். சத்தியம் நமக்கு வழிகாட்டியாகவும், மனத் துணிவு நம்முடைய மந்திரியாகவுமிருந்தால் நாம் இலட்சி யத்தை எளிதில் அடைந்து விடலாம்," என்று தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மாண்டேகு — செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை நிராகரிக்க வேண்டுமென இக் காங்கிரஸில் தாஸ் கொண்டுவந்த தீர்மானத்திற்குச் "சீர்திருத்தங்களை நடத்துவதில் ஒத்துழைப்பது" என்ற ஒரு திருத்தத்தை மகாத்மா காந்தி கொடுத்தார். முடிவில் இருவரும் ஒரு சமரசத்திற்கு வந்தனர். அதன் பயனாகப் பூரண பொறுப்பாட்சி ஏற்படும்படி சீர்திருத்தங்களை நடத்து வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பஞ்சாப் படுகொலைக்குக் காரணமாயிருந்த மைக்கேல் ஓட்வியரை இராணுவக் கமிஷன் பதவியிலிருந்து நீக்க இக் காங்கிரஸ் வற்புறுத்திற்று.

# 7. காங்கிரஸ் மகாநாடுகள்

## மூன்றும் பகுதி—1920—1928.

**முப்பத்தாருவது காங்கிரஸ்—1920**

காங்கிரஸின் சரித்திரத்தில் மற்ெறுரு அத்தியாயத்தை இவ்வாண்டு ஆரம்பித்துவைத்தது. கல்கத்தாவில் கூடிய இவ்விசேஷ காங்கிரஸிற்கு **லாலா லஜபதிராய்** தலைமையேற்றுர். "பாஞ்சால சிங்கம்" என்று இவரை மக்கள் அழைப்பதுண்டு.



சைமன் கமிஷனைப் புறக்கணித்து நடந்த ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்தியபோது இவர் போலீஸ் தடியடிக்கு உள்ளானுர். தடியடி காரணமாக இவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டன. "**என்மேல் விழுந்த ஒவ்வொரு அடியும் ஆங்கில ஆதிபத்தியத்தின் சவப்பெட்டியில் அடிக்கப்பட்ட ஆணியாகும்**" என்று தாம் தாக்கப்பட்டதைப்பற்றித் தம் கருத்தைத் தெரிவித்தார்.

"கடுமையான போராட்டத்தை நியாயமான வழியில் நடத்துவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். வெற்றியில் கஷ்டங்கள் உண்டு. ஆனல் பிற்போக்காளர் உண்டாக்கும் அதைரியத்தைக் கண்டு நான் அயர்ந்துவிடப் போவதில்லை. ஒரு நாட்டு மக்களால்தான் அந்நாடு உருவாக்கப்படுகிறது. வானிடிந்து உச்சிமீது விழும்படியான துன்பம் வந்தாலும் மக்கள் அஞ்சா நெஞ்சங் கொண்டவர்களாகத் திகழ வேண்டும்," என்று தம் தலைமையுரையில் மக்களைத் தட்டியெழுப்பினுர்.

திலகரின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப் பட்டது. • நாடெங்கும் நடைபெறக்கூடிய முதல் போராட்டத் தீர்மானம் இக் காங்கிரஸில்தான் நிறை வேற்றப்பட்டது. இதற்குத்தான் **ஒத்துழையாமைத் தீர்மானம்** என்று பெயர்.

ஆங்கில ஆட்சியின்மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்டதை அறிவுறுத்துவதற்கு, அவர்களால் வழங்கப் பட்ட கௌரவப் பட்டங்களைத் திருப்பியனுப்பிவிடு வது, அரசாங்க அலுவல்களில் பங்குகொள்ள மறுப் பது, நீதி மன்றங்களுக்குச் செல்லாதிருப்பது, பள்ளி களையும் சட்டசபைகளையும் புறக்கணிப்பது, அன்னி யத் துணிகளை உடுத்தாதிருப்பது ஆகிய இவை போன்ற நடவடிக்கைகளை நாட்டு மக்கள் மேற்கொள்ள வேண்டு மென்பதே அந்தத் தீர்மானமாகும்,

இக் காங்கிரஸுக்குப் பின் மகாத்மா காந்தி நாட் டின் தனிப்பெருந் தலைவரானார். கதர் இயக்கம் இவ் வாண்டில்தான் துவக்கப்பட்டது. இந்துஸ்தானி பிரசார இயக்கமும் இவ்வாண்டில்தான் ஆரம்பமாயிற்று.

**கதர் இயக்கம்—1920**

**திலகர் சுயராஜ்ய நிதியின்** உதவியால் நாடெங்கும் கைராட்டையைப் பரப்பிக் கையால் நூற்ற நூலை நெய்து துணிகளை விற்று வந்தார்கள். முதலில் அந்தப் பணியைக் காங்கிரஸே நேரடியாகக் கவனித்து வந்தது. பின்னால் அரசியல் வேலைகளால் பாதிக்கப்படாதவாறு **நூற்போர்க் கழகம்** என்ற தனி ஸ்தாபனம் ஏற்படுத்தப் பட்டது. திலகரின் பெயராலும் தேசபந்து தாஸ் பெயராலும் மகாத்மா காந்தியால் சேமிக்கப்பட்ட நிதி களே இந்த ஆக்க வேலைக்கான கழகத்திற்கு உயிரூட் டின. இக்கழகத்திற்கு மகாத்மாவே தலைவராயிருந்தார்.

கழகம் அபிவிருத்தியாகிக் கொண்டிருந்தது. நாடெங்கும் கிளைகள் நிறுவப்பட்டன. தமிழ் நாட்டிலும் ஒரு கிளை நிறுவப்பட்டது. இராஜாஜி, ஈ.வெ. இராமசாமி நாயக்கர், முத்துரங்க முதலியார், டாக்டர் ராஜன் ஆகிய குறிப்பிடத்தக்கவர்கள் நிர்வாகக் குழுவிலிருந்தனர். கே. சந்தானம் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கதர் உற்பத்திக்கும், விற்பனைக்கும் தமிழ்நாடெங்கும் கிளைகள் திறக்கப்பட்டன. தமிழ் நாட்டின் கதர்த் துணியே தலை சிறந்து விளங்கியது. அதற்குத் தனிச் சிறப்புக் கொடுத்த பெருமை பின்னால் செயலாளராயிருந்த கோவை அய்யாமுத்துவையே சாரும். பின்னர் அவரைத் தொடர்ந்து பணியாற்றிய என். இராமசாமியும் இரண்டாவது மகா யுத்தகால நெருக்கடியைச் சமாளித்து கதர் இயக்கத்தைத் தமிழ் நாட்டில் நிலை நிறுத்தினார்.

### முப்பத்தேழாவது காங்கிரஸ்—1920

இவ்வாண்டின் இறுதியில் மீண்டும் காங்கிரஸ் நாகபுரியில் கூடிற்று. சேலத்தின் தலைசிறந்த வழக்கறிஞர் சி. **விஜயராகவாச்சாரியார்** தலைமை தாங்கினார். "**சென்னையின் அருங்கிழவர்**" என்று இவரைப் பிற்காலத்தில் அன்புடன் அழைப்பதுண்டு.



"இந்தியாவின் எதிர்காலத்தை இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்ட் தான் தீர்மானிக்க வேண்டுமென்று சொல்வது இந்தியர்களை அவமதிப்பதாகும். நம்முடைய உரிமைகள் பறிக்கப்பட்டு மனித வர்க்கத்திலேயே மிகக் கீழானவர்

களாக நாம் நடத்தப்படுகிறோம். இங்கிலேயிலிருந்து நாம் மீளவேண்டும். அதற்காக '**நன்னடத்தையுள்ள கூட்டாளியாயிரு; இல்லையேல் நாட்டைவிட்டு அகன்றுவிடு**' என்று ஆங்கிலேயர்களுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்'' என்று தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

'அஹிம்சையே அடிப்படை' என்று விளக்கம் கூறி கல்கத்தா காங்கிரஸின் ஒத்துழையாமைத் தீர் மானத்தை இக் காங்கிரஸ் வற்புறுத்திற்று; நாட்டை மொழிவாரி மாகாணங்களாகப் பிரித்துக் காங்கிரஸின் வேலைகளைச் சுலபமாக நடத்தவும் வழி செய்தது; பதி னைந்து பேர் கொண்ட செயற் குழுவும் முதன் முதலாக நியமிக்கப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த அரங்கசாமி அய்யங்கார் இவ்வாண்டில் காங்கிரஸின் செயலாளர்களில் ஒருவராக இருந்தார்.

## முப்பத்தெட்டாவது காங்கிரஸ்—1921

அஹமதாபாத்தில் கூடிய இக்காங்கிரஸிற்குத் தலை மை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த வங்கவீரர் **சி. ஆர். தாஸ்** சிறைப்பட்டதால் டில்லியைச் சேர்ந்த **ஹக்கீம் அஜ்மல் கான்** தலைவரானார். மகாத் மாவின் ஒத்துழையாமையில் நம் பிக்கைக் கொண்ட இவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பெரி தும் பாடுபட்டார்.



''புன்சிரிப்புத்தவழ, மகிழ்ச்சி யோடு சிறை செல்லும் மக்களின் மனமுவந்த தியாகத் தைப் பார்த்தபின் ஒத்துழையாமை வெற்றிபெறவில்லை

யென்று யார் கூறமுடியும்? அஹிம்சை வழியிற் செல்லும் ஒத்துழையாமை, இந்தியாவுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கே உரிய இயக்கமாகும். இதை உலகமேற்கையாளக் கூடிய ஒரு காலம் வரப் போகிறது'' என்று சொற்பொழிவாற்றினர்.

## முப்பத்தொன்பதாவது காங்கிரஸ்—1922

**தேசபந்து சி. ஆர். தாஸின்** தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் கயாவில் கூடிற்று. வங்கத்தில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தித் தேடிய பொருளனைத்தையும் நாட்டு நலத்தின் பொருட்டே உதவிய வள்ளலாவார் தாஸ். இவர் சட்டசபை வேலைகளைக் கவனிப்பதற்காகக் காங்கிரஸிற்குள் சுயராஜ்யக்கட்சியை ஆரம்பித்தார்.



''சட்டம், அமைதி என்ற பெயரால் மக்கள் சம்மதமின்றி நடவடிக்கைக்கு வரும் எல்லாவித முறைகளையும் மீறுவதே சுதந்திரம். சட்டமும், அமைதியும் மனிதனுக்காக என்பதே நீதி. இந்நீதியை நிலைநாட்ட வெற்றி கிட்டும் வரை ஆண்மையுள்ளவர்கள் போராடியே ஆக வேண்டும்'' என்று தம் தலைமையுரையில் முழங்கினர்.

இக் காங்கிரஸ் தாஸின் சட்டசபைப் பிரவேசத் தீர்மானத்தைத் தோற்கடித்தது. எதிர்ப்பைத் தலைமையேற்று நடத்தியவர் இராஜாஜி.

## நாகபுரிக் கொடிப் போர்—1923

நாகபுரி நகரத்து சில வீதிகளில் தேசியக் கொடிகளைத் தாங்கிக் கொண்டு யாரும் செல்லக்கூடாதென உத்திரவிட்டனர். அதை எதிர்த்து நடைபெற்ற சத்தியாக்கிரகத்திற்கே **நாகபுரிக் கொடிப் போர்** என்று பெயர்.

மே மாதம் ஆரம்பமான சத்தியாக்கிரகம் ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கலாயிற்று. இந்த நான்கு மாத காலத்திற்குள் சிறை புகுந்தோர் எண்ணிக்கைக் கணக்கற்றதாயிற்று. நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் தொண்டர்கள் வந்து குவிந்து விட்டனர்.

இந்த இயக்கத்தில் அலஹாபாத்தைச் சேர்ந்த **ரூம்சி சுபத்ராதேவி** என்ற வீரப்பெண்மணி சிறை புகுந்தது குறிப்பிடத்தக்கதாகும். காங்கிரஸின் பொருட்காப்பாளராக நீண்ட காலமிருந்த ஜம்னுலால் பஜாஜ் சிறைப்பட்டார். அவருக்கு விதிக்கப்பட்ட அபாரத் தொகைக்காக அவருடைய மோட்டார் பறிமுதல் செய்யப்பட்டது. அதை ஏலம் கூறியபோது கேட்பதற்கு யாரும் முன்வரவில்லை. அதிகாரிகள் வெட்கிப்போய் மோட்டாரைக் கத்தியவாருக்கு எடுத்துச் சென்றனர்.

கடைசிக்கட்டத்தில் போராட்டத்துக்குப் பட்டேல் சகோதரர்கள் தலைமை தாங்கினர். அரசாங்கத்தின் ஆணவமும் அடங்கிற்று. ஒருநாள் சென்ற ஊர்வலத்தைத் தடை செய்யவில்லை. இவ்வாறாகக் கொடிப்போர் வெற்றியோடு முடிவுற்றது.

## நாற்பதாவது காங்கிரஸ்—1923

இவ்வாண்டு டில்லியில் கூடிய விசேஷ காங்கிரஸிற்கு மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையேற்றார். இவர் மெக்காவில் பிறந்தவர்; எகிப்து நாட்டில் கல்வி பயின்றவர்; கல்கத்தாவில் குடியேறி "இல்ஹிலால்" "அல் பலாக்" என்ற பத்திரிகைகளையும் நடத்தியவர்; மகாத்மாவின் போர் முறைகளில் நம்பிக்கை வைத்திருந்தவர். பன்முறை சிறை சென்ற இவர் புகழ் வாய்ந்த பல நூல்களையும் இயற்றிய பேரறிஞருமாவார். இவர் இந்தியா சுதந்திரமடைந்தபின் மத்திய அரசாங்கக் கல்வி மந்திரி பதவி யேற்றனர்.



"இயற்கையை ஆளும் இறைவனின் ஊழியர்களை அடிமைகளாக்க ஒரு தனி மனிதனுக்கோ அல்லது ஒரு எதேச்சாதிகாரத்திற்கோ எவ்வித உரிமையுமில்லை. என் நாட்டுச் சுதந்திரத்தைச் சிறிது சிறிதாகப் பெற்றுக்கொள்ளச் சொல்வது, என்னிடமிருந்து பறிக்கப் பட்டப் பொருளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்வதற்கொப் பாகும்," என்று மௌலானா நிகழ்த்திய சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

சட்டசபைப் பிரவேசத்தை இக் காங்கிரஸ் அனுமதித்தது; தக்க முறையில் சட்ட மறுப்பைத் திட்டமிடவும் ஒரு குழுவை நியமித்தது.

## நாற்பத்தொன்றுவது காங்கிரஸ்—1923

வழக்கம்போல் இவ்வாண்டின் கடைசியில் காங்கிரஸ் காக்கிநாடாவில் கூடிற்று. மௌலானா முஹம்மதலி



தலைமைதாங்கினர். இவர் கிலாபத் இயக்கத்தின் தலைவராக இருந்தவர்; முதல் வட்டமேஜை மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டவர். வட்டமேஜை மகாநாட்டில் சொற்பொழிவாற்றுகையில் இவர் இரத்தக் குழாய் வெடித்து இங்கிலாந்திலேயே உயிர் நீத்தார்.


"மனிதத் தன்மையும் நியாய புத்தியும் இழந்து மிருக பலத்தை என்மீது அரசாங்கம் ஏவுமாயின் சாத்தியமான சக்தியை யெல்லாம் திரட்டி நானும் தங்குத்தடையின்றித் தாக்குவேன். யுத்தம் கொடிது; அதனினும் கொடிது கொடுங்கோலாட்சி. நாட்டுக்காக உயிர்விட முடிவு செய்வீர்களேயானல் மறுகணம் இக் கொடுங்கோலாட்சி அஸ்தமித்துச் சுதந்திர சூரியன் உதித்துவிடும்" என்று ஆவேசம் ததும்ப இவர் தம் தலைமையுரையை நிகழ்த்தினர்.

## நாற்பத்திரண்டாவது காங்கிரஸ்—1924

இவ்வாண்டிற்கும், பெல்காம் நகரத்திற்கும் ஒரு தனிப் பெருமையுண்டு. அதற்கு ஒரே காரணம் இந்த ஆண்டு பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸிற்கு **மகாத்மா காந்தி** தலைமை வகித்ததுதான்.

மகாத்மாவைப் பற்றி நாம் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறோம். மேலும் காங்கிரஸின் பிற்பகுதிச் சரித்திரமே அவருடைய வாழ்க்கைச் சரிதமாகிவிட்டது.

"கொடிய அடக்குமுறைகளைப்பற்றி நாம் வெளியிட்ட கண்டனங்களையெல்லாம் அரசாங்கம் அலட்சியப்படுத்திவிட்டது.



அடக்குமுறையின் உண்மையான பொருள் என்ன என்பதை இப்பொழுது விளக்கிக் கொண்டேன். ஐரோப்பிய ஆட்சியில் ஆசிய மக்களை அடக்குவதே அவர்களின் நோக்கமாகும். இந்தியன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கவும், வெள்ளையர் அதன் பலனை அனுபவித்து வாழவும் வகைசெய்துள்ள ஆங்கிலேயரின் உள்ளக்கிடக்கை வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அவர்களுடைய ஆட்சியை இந்தியாவில் நிலைக்கச் செய்யும் ஒவ்வொரு முயற்சியையும் நான் என் உயிருள்ள வரையில் எதிர்ப்பேன். ஆனால் இந்த எதிர்ப்பில், பலாத்கார முறைகளைக் கைக்கொள்ள மாட்டேன். சத்தியாக்கிரகம் ஒருநாளும் தோல்வியடையாது. ஓர் உண்மையான சத்தியாக்கிரகி இருந்தாலும் போதும். வெற்றி கிடைப்பது நிச்சயம். என்றும் நாம் எல்லோரும் உண்மையான சத்தியாக்கிரகிகளாக இருக்க முயலுவோமாக" என்று மகாத்மா தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

25

## நாற்பத்து மூன்றாவது காங்கிரஸ்—1923

கவியரசி **சரோஜினி** நாயுடுவின் தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் கான்பூரில் கூடிற்று. சரோஜினி நாயுடுவின் கவிதைகள் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு சிறந்து விளங்குகின்றன. வெளி நாடுகளுக்கும் சென்று இவர் காங்கிரஸின் நோக்கங்களைப்பற்றிப்பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டிற்கும் இவர் சென்று வந்தார்.



கவிதை போன்ற இவரது தலைமை உரையில் விடுதலைப் போரில் பயங்கொள்வது மன்னிக்கக்கூடாத துரோகமென்றும், நம்பிக்கையிழந்து ஏக்கங்கொள்வது மன்னிக்கக்கூடாத பாவமென்றுங் கூறினார்.

## நாற்பத்து நான்காவது காங்கிரஸ்—1926


இவ்வாண்டு கௌஹாத்தியில் காங்கிரஸ் கூடிற்று. சென்னையைச் சேர்ந்த புகழ்வாய்ந்த வழக்கறிஞராகிய **எஸ். சீனிவாசய்யங்கார்** தலைமையேற்றார். இவர் அட்வகேட் ஜெனரல் பதவி வகித்தவர்; சி. ஐ. ஈ. என்ற பட்டம் பெற்றவர்; ஒத்துழையாமையின்போது பட்டம் பதவிகளைத் துறந்தவர்; இந்திய பூரண சுதந்திர லீகை ஆரம்பித்தவர்; சைமன் கமிஷன் புறக்கணிப்பில் பங்கு கொண்டவர் இவர் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் இருந்தார்.



"இங்கிலாந்திலுள்ள அரசாங்கத்தார் அர்த்தமற்ற வார்த்தைகளையே திருப்பித் திருப்பி வெவ்வேறு குரலில் சொல்லிக்கொண்டிருப்பார்கள்; பொருளில் மாறுத லிருக்காது. அவர்கள் சொல்வதுதான் என்ன? காங்கி ரஸ்' சுயாட்சிக் கோரிக்கையை விட்டுவிட வேண்டும்; அதிகார வர்க்கத்துடன் கலந்துவிடவேண்டும். இதுவே அவர்கள் விரும்புவதென்பது சந்தேகமின்றித் தெரிந்து விட்டது. சுதந்திரப் பாதையில் நாடு முன்னேறிக் கொண்டிருக்கையில் அரசாங்கம் அதைத் தடுக்கச் செய்யும் முயற்சிகளை எதிர்ப்பது தான் சட்டசபைகளி லுள்ள காங்கிரஸ்காரர்களின் முக்கியமான கொள்கையா யிருக்க வேண்டும். இப்போது மந்திரிசபைகளைப் பற்றி நாம் சிந்திப்பது முற்றிலும் பைத்தியக்காரத்தன மாகும்," என்று தம் தலைமைப் பேருரையில் இவர் குறிப்பிட்டார்.

**நாற்பத்தைந்தாவது காங்கிரஸ்—1927**

**டாக்டர் அன்சாரியின்** தலைமையில் இவ்வாண்டு காங்கிரஸ் சென்னையில் கூடிற்று. இவர் ஹோம் ரூல் கிளர்ச்சி, ஒத்துழையாமை, பொதுமக்கள் சட்டமறுப்பு, உப்புச் சத்தியாக்கிரகம், சைமன் கமிஷன் புறக் கணிப்பு முதலிய எல்லா இயக் கங்களிலும் முக்கிய பங்கு கொண்டு சிறை சென்றவர்.



"ஆங்கில ஆதிபத்தியம் இந்திய அஸ்திவாரத்தின் மேல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா விடுதலை

யடைந்தால் அந்த ஆதிபத்தியக் கோட்டை தகர்ந்து உருக்குலைந்துவிடும்; ஆசிய சுதந்திரமும், உலக சுதந்திர மும் காக்கப்பட முதலில் இந்தியா விடுதலை பெற்ருக வேண்டும்" என்று இவர் தம் தலைமையுரையில் குறிப் பிட்டார்.

இக்காங்கிரஸின் வரவேற்புக் குழுவிற்கு முத்துரங்க முதலியார் தலைவராயிருந்தார். "பூரண சுயேச்சையே இந்திய மக்களின் குறிக்கோள்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நீல் சிலை சத்தியாக்கிரகம்—1927

இந்த ஆண்டில் சென்னை வெகு சுறுசுறுப்பாக இருந்தது. காங்கிரஸ் கூடுவதற்கான வேலைகள் ஆரம்ப மாகுமுன் மௌண்ட் ரோடிலிருந்த நீல் சிலையை அகற்றச் சத்தியாக்கிரக நாதத்தைத் தமிழ் நாட்டு இளை ஞர் சிலர் எழுப்பிவிட்டனர். இந்த இயக்கத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியதும் அவசியமல்லவா!

முதல் சுதந்திரப் புரட்சியைப்பற்றி நாம் ஆரம்பத் திலேயே தெரிந்துகொண்டிருக்கிறோம். அப்புரட்சிக் குப்பின் சென்னையில் இராணுவ அதிகாரியாயிருந்த நீல் என்பனை வடக்கே அமைதியைப் பாதுகாக்கும் பொருட்டு ஆங்கிலேயர் அனுப்பி வைத்தனர். அவனும் அவனைத் தொடர்ந்து சென்ற படையும் நடத்திய செயல்கள் ஒரு சோகக் கதையாகும்.

அவர்கள் சென்ற வழிகளிலுள்ள மக்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்; சிலர் மரக் கிளைகளில் கட்டித்

தொங்கவிடப்பட்டனர். சிலருடைய கழுத்தில் சுருக் குப்போட்டு, அவர்களை யானைமீது ஏற்றி, அந்த யானையை ஒரு மரத்தடியில் நிறுத்திக் கழுத்தில் தொங் கும் கயிறுகளை மரக்கிளைகளில் கட்டியபின் யானையை அப்புறப்படுத்தியபோது, அவர்கள் ஊஞ்சலாடுவதைப் போன்ற நிலையில் ஒருவரோடொருவர் மோதிக்கொள் வதை வேடிக்கையாகப் பார்த்தனர்.

சில கிராமங்களைச் சுற்றி எந்திர பீரங்கிகளை நிறுத்தி மக்களை வெளியேறுதபடி தடுத்து அக்கிராமங் களைத் தீயிட்டுச் சாம்பலாக்கினர். இம்மாபாதகச் செயல்களைப் புரிந்த நீல் என்பவனைப் பாராட்டு முறை யில் அவனுடைய சிலையைச் சென்னையில் நாட்டியிருந் தார்கள். அதை அகற்றவே சத்தியாக்கிரகம் ஆரம் பிக்கப்பட்டது.

அந்தச் சிலையைச் சுத்தியைக்கொண்டு உடைப்ப தென்பதே ஆரம்பத் திட்டம். ஆனால், மகாத்மா காந்தி யின் யோசனைக்குப்பின் அது, களிமண் உருண்டைகளைக் கொண்டு சிலையை அடிப்பது என்று மாற்றப்பட்டது. திருநெல்வேலியைச் சேர்ந்த சோமயாஜுலு, குடியாத் தத்தைச் சேர்ந்த சாமிநாத முதலியார், கடலூரைச் சேர்ந்த தேவநாயகய்யா ஆகிய இவர்கள் தலைமையில் இந்த இயக்கம் நடைபெற்றது.

இந்த இயக்கத்தில் தமிழ்நாடு, ஆந்திர, கர்நாடக, கேரளப் பகுதியிலிருந்து பலர் பங்கெடுத்துக்கொண்டு சிறைசென்றனர். இதில் தென்னாற்காட்டைச் சேர்ந்த முருகப்படையாச்சியும், அவரது மனைவி அஞ்சலையம் மாளும் அம்மாக்கண்ணு என்ற தம் கைக் குழந்தை

யுடன் சிறைக்குச் சென்றது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி யாகும்.

இச்சமயம் சைமன் கமிஷன் வெற்றிகரமாகப் புறக்கணிக்கப்பட வேண்டியிருந்ததால், தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இச் சத்தியாக்கிரகம் நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் 1937-ம் ஆண்டு, காங்கிரஸ் சட்டசபைகளைக் கைப்பற்றி மந்திரிசபைகளை அமைத்த போது, சென்னை முதன் மந்திரியாக இராஜாஜி பதவி யேற்றார். அவர் அந்த நீல் சிலையை எடுத்துப் பொருட் காட்சிச்சாலையில் வைக்குமாறு உத்திரவிட்டார். ஆங்கி லேயர்கள் இராஜாஜியின் இந்த நடவடிக்கையை விரும்பியிருக்கமாட்டார்கள் அல்லவா! இதைப்பற்றிய பேச்சு இங்கிலாந்தில் கிளம்பியது. அதற்கு இராஜாஜி, "அஃது இருக்கவேண்டிய இடத்தில் பத்திரமாக இருக் கிறது" என்று பதிலளித்தார்.

## நாற்பத்தாருவது காங்கிரஸ்—1928

இவ்வாண்டு பிப்ரவரி மாத முதல்வாரம் சைமன் கமிஷன் இந்தியாவில் அடிவைத்தது. நாடெங்கும் கடையடைப்பு மிக வெற்றிகரமாக நடந்தேறியது. மத்திய சட்டசபையிலும் கமிஷனைப் புறக்கணிக்கும் தீர்மானம் நிறைவேறிற்று.

இந்நிலையில் டில்லியில் சர்வகட்சி மகாநாடு ஒன்று கூடி இந்தியாவுக்கு ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க மோதிலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது.

இவ்வாண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸிற்கும் மோதிலால் நேருவே தலைவராயிருந்தார். இவர் உருவாக்கியிருந்த அரசியல் அமைப்புத் திட்டமே இக் காங்கிரஸின் முக்கியமான தீர்மானமாக இருந்தது.

" ஆங்கில ஆதிபத்தியத்துக் குட்பட்ட சுயாட்சி" என்ற அடிப்படையில் நேருவின் திட்டம் இருந்தது. அடுத்த ஆண்டு டிஸம்பர் மாதத்திற்குள் இத் திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒத்துழையாமையும், வரிகொடா இயக்கமும், ஆரம்பிக்கப் படும் என்று காலவரையறையும் அதில் நிர்ணயிக்கப் பட்டிருந்தது.

இத் தீர்மானத்தை மகாத்மா காந்தி முன் மொழிந்தார். ஆனால் ஜவஹர்லால் நேருவும், சுபாஷ் சந்திர போஸும் அதனை எதிர்த்தார்கள். ஓட்டுக்கு விடப் பட்டுத் தீர்மானம் நிறைவேறிற்று. இக் காங்கிரஸில் தந்தையாகிய மோதிலால் நேருவின் திட்டத்தைத் தனயனாகிய ஜவஹர்லால் நேரு எதிர்த்தது குறிப்பிடத் தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

## பர்தோலி இயக்கம்—1928

'காங்கிரஸின் இரும்பு மனிதர்' என்று அரசியல் வாதிகளால் அழைக்கப்பட்ட வல்லபாய் பட்டேலின் ஆற்றலை ஆங்கில அரசாங்கத்திற்கு அறிவித்தது பர்தோலி வரிகொடா இயக்கமேயாகும். பட்டேலின் உடன் பிறந்தவராகிய விட்டல்பாய் பட்டேலும் புகழ் வாய்ந்த காங்கிரஸ் முன்னணி வீரர்களில் ஒருவராவார். இவ்வியக்கத்தின்போது அவர் மத்திய சட்ட சபையின் தலைவராயிருந்தார்.

பர்தோலி என்னும் சிற்றூர், பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த சூரத் ஜில்லாவில் உள்ளது, அவ்வூர் 1927-ம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தினல் மிகவும் சீர்கேடடைய நேரிட்டது. உழவர்களின் உழைப்பின் பயனையெல்லாம் வெள்ளம் கொள்ளை கொண்டுவிட்டது. மக்கள் உணவுக்கும் வழியின்றி அல்லலுற்றனர்.



இத்தகைய நிலைமையில் நிலவரியை உயர்த்தியிருப்பதாக அரசாங்கம் உத்திரவிட்டது. உள்ள வரியையே கொடுக்க இயலாமல் அவதிக்குள்ளாயிருந்த உழவர்கள், இந்த நிலவரி உயர்வைக் கேட்டு ஆத்திரங் கொண்டனர். தங்கட்குள்ள கஷ்ட நிலையைப் பன்முறை எடுத்துக் கூறியும் அதிகார வர்க்கத்தின் செவிகளில் அவை ஏறவில்லை.

உயர்த்தப்பட்ட நிலவரியை வசூலிக்க அதிகாரிகள் ஆரம்பித்தனர்; வசூலாகவில்லை. பத்து நாட்களுக்குள் நிலவரியைக் கட்டாவிட்டால் அபராதமும் சேர்த்துச் செலுத்தவேண்டும் என்று எச்சரித்தனர். வருவாய்க்கு வழியில்லாமையால் மக்கள் செய்வதறியாது கலங்கினர். சிலர் தலைவர்களை அணுகித் தங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில் **வல்லபாய் பட்டேல்** தலையிட்டார். "நிலவரி உயர்வு" மிக அதிகமென அரசாங்கத்துக்கு அறிவித்தார். அரசாங்கம் ஆராய மறுத்தால் வரிகொடா இயக்கம் துவக்கப்படுமெனவும் அறிவுறுத்தி

ஞர். இந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தினர் அதிகாரிகள்.

உழவர்களனைவரையும் ஒன்றுதிரட்டி வரிகொடா இயக்கத்தின் விளைவுகளை எடுத்துரைத்தார். அஹிம்சை வழியைப் பின்பற்றி வரிகொடா இயக்கத்திலிறங்கத் தாங்கள் கொண்டுள்ள உறுதியை அவ்வுழவர்கள் ஒரு முகமாகத் தெரிவித்தனர்.

வல்லபாய் பட்டேலின் தலைமையில் இயக்கம் ஆறு மாத காலம் நீடித்தது. வரிவசூலிக்க அதிகாரிகள் கையாண்ட தந்திரங்கள் பலிக்கவில்லை. பயமுறுத்திப் பார்த்தனர்; எவரும் கலங்கவில்லை. சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர்; அப்போதும் உறுதி தளரவில்லை. கயவரை ஏவிக் கொடுமைக்குள்ளாக்கினர்; எனினும் யாரும் வரி கொடுக்கவில்லை.

இவ்வாறு உழவர் கட்டுப்பாட்டின் சிகரத்திலிருந்தனர். வேறு வழியின்றிப் பம்பாய் மாகாண அரசாங்கம் இணங்கிவர நேர்ந்தது. சத்தியாக்கிரக இயக்கம் நிற்கவேண்டுமானால் சிறைபட்டவர்களை விடுவிக்கவும், பறிமுதலான நிலங்களை நிபந்தனையின்றித் திருப்பித் தரவும் வேண்டுமென்று வல்லபாய் பட்டேல் கூறினார். அரசாங்கம் சம்மதித்தது; சத்தியாக்கிரகமும் நின்றது.


மகாத்மா காந்தியின் தலைமையில் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. அன்று மகாத்மா காந்தி வல்லபாய் படேலைச் சர்தார் என்று அழைத்தர். அது முதலாக நாட்டவர் யாவரும் அவரைச் சர்தார் என்றே அழைத்தனர். சர்தார் என்ற பதத்திற்குத் தளகர்த்தன் என்பது பொருளாகும்.

# 8. காங்கிரஸ் மகாநாடுகள்

## நான்காம் பகுதி—1929—1940

### நாற்பத்தேழாவது காங்கிரஸ்—1929

இவ்வாண்டே சுதந்திரப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தை ஆரம்பித்து வைத்தது எனலாம்.



ஆங்கிலேயரின் எவ்விதத் தொடர்புமில்லாத பரிபூரண சுதந்திரம் அடைவதே குறிக்கோள் என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டிய காங்கிரஸின் தீர்மானம் இந்த ஆண்டில்தான் பிறந்தது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக விளங்கும் **ஜவஹர்லால் நேருவின்** தலைமையில் லாகூரில் கூடிப் பரிபூரண சுதந்திரத் தீர்மானத்தை இவ்வாண்டு காங்கிரஸ் நிறைவேற்றியது.

இக் காங்கிரஸிற்குத் தலைமை வகித்த இவரை இன்று அறியாதார் யாவர் ? இவர் ஒருமேதை. இவர் எழுதிய 'உலக சரித்திரம்', 'சுய சரிதம்', 'இந்தியாவைப் பற்றிய ஆராய்ச்சி' ஆகிய இம் மூன்றும் உலகமெங்கும் போற்றப்படும் நூல்களாகும். அவற்றுள் இவருடைய கவிதா உள்ளம் பிரதிபலிப்பதை நாம் காணலாம். இருபதாம் நூற்றுண்டில் உலக இராஜதந்திரிகளில் இவர் குறிப்பிடத் தகுந்தவராவார். இவர் இக்காங்கிரஸிற்குத் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவு:—

" ஐரோப்பிய ஆதிக்கத்தின் முடிவுகாலம் என் கண் முன்னே தென்படத் தொடங்கிவிட்டது. ஆசியாவும், அமெரிக்காவுமே எதிர்காலத்தில் வழிகாட்டக் கூடியவை. இந்தியா இனி அன்னிய ஆட்சியைச் சகித்துக் கொண்டிருக்காது என்பதை நடவடிக்கையில் காட்டப் போகிறோம். பலாத்காரம் கெட்டதுதான்; ஆனால், அடிமைத்தனம் அதைவிடக் கொடுமையானது. அடிமைத்தனம் நீக்கப்பட நாட்டுமக்கள் காங்கிரஸையே நம்பியுள்ளார்கள்."

"நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைக்க இறங்கியிருக்கும் நாம் எது வருமோ என்று அஞ்சுவது கோழைத்தனம். இரகசிய இயக்கங்கள் நடத்திய காலம் மலையேறிவிட்டது. அன்னியக் கட்டுக்களிலிருந்து இந்தியாவை விடுவிக்க நாம் கொண்டுள்ள உறுதியை இன்று பகிரங்கமாக அறிவிக்கிறோம். தோழர்களே! ஆண், பெண் என்ற வேறுபாடின்றிப் போரிலிறங்குங்கள். சிறையும், சாவும் உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். அதனால் இந்தியா விடுதலையடையும். அது உலக விடுதலைக்கு வழிகாட்டும். புரட்சி நீடூழி வாழ்க" என்பதாகும்.

## உப்புச் சத்தியாக்கிரகம்—1930

இலாகூரில் நிறைவேற்றப்பட்ட பரிபூரண சுதந்திரத் தீர்மானத்தை நடைமுறையில் கொண்டுவரும் முயற்சியில் காங்கிரஸ் இறங்கியது. இவ்வாண்டு ஜனவரி 26-ம் நாள் பூரண சுதந்திர தினமாகக் கொண்டாடப்படவேண்டுமென நாட்டு மக்களை அது கேட்டுக்கொண்டது. அவ்வாறே காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலும் உள்ள மக்கள், அன்றையதினம் தேசியக்கொடி

யின் கீழ்க் கூட்டங் கூட்டமாகக் கூடிச் **சுதந்திரப் பிரதிக்ஞை** எடுத்துக்கொண்டனர்.

இதனால் மக்களிடையே சுதந்திர வேட்கையும் போராட்ட உணர்ச்சியும் வளர்ந்துகொண்டிருந்தன. மக்களின் பக்குவ நிலையை அறிந்த மகாத்மா காந்தி போராட்டத் திட்டம் ஒன்றை உருவாக்கினார். அப் போராட்டம் வெற்றிபெற ஆயுதங்கள் அவசியமில்லை.

மலை கலங்கினும் நிலை கலங்காத மன ஆற்றல் படைத்த வீரத்தியாகிகள் பலர் திரண்டனர். உப்புச் சட்டத்தை மீறி உப்பு எடுக்க சில தொண்டர்களோடு தம் ஆச்சிமரத்தைவிட்டு இருநூறுமைல் தூரத்தி லுள்ள மேற்குக் கடற்கரையை நோக்கி மகாத்மா புறப் பட்டுவிட்டார் என்ற செய்தி, காட்டுத்தீயைப்போல் நாடெங்கும் பரவிற்று.

"உப்பு, உணவுக்கு உயிரூட்டுந் தன்மையது. அந்த உப்பு மனிதனின் அடிப்படைத் தேவையான எளிய உணவுக்குக்கூடத் தேவைப்படுகிறது. அஃது இயற் கையான கடல் நீரிலிருந்து, சூரிய வெப்பத்தின் உதவி யால் உற்பத்தியாகிறது. அந்த உப்புக்குக்கூட ஆங்கில அரசாங்கம் வரி விதித்து, அந்த வரியையும் அதிகப் படுத்திக்கொண்டேயிருந்தது. அந்த உப்பு வரியைக் கண்டிக்கு முறையில்தான் மகாத்மா காந்தி **உப்புச் சத்தி யாக்கிரகத்தை** ஆரம்புத்துள்ளார்.'' என்பதையும் உலகம் அறிந்தது.

மற்றைய காங்கிரஸ் தலைவர்களும் ஆங்காங்கே உப்புச் சட்டத்தை மீற முற்பட்டார்கள். தமிழ் நாட் டின் ஒப்பற்ற தலைவரான இராஜாஜி, தொண்டர்களு டன் தஞ்சை ஜில்லாவிலுள்ள கடற்கரையூரான

வேதாரணியத்தை நோக்கிப் புறப்பட்டார். வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகம் யாவராலும் அறியப்பட்ட தொன்றாகும்.

இந்தப் புதுமை வாய்ந்த போராட்டத்தை அடக்க வகை தெரியாமல் அரசாங்கம் தடுமாறிற்று. மகாத்மா காந்தியையும் மற்றைய முக்கிய தலைவர்களை யும் சிறைப்படுத்திற்று. உப்பு காய்ச்சும் தொண்டர் களைத் தடியாலடித்துக் கூட்டங்களைக் கலைக்கும் முறை யைப் போலீஸார் கையாண்டனர். இவ்வித அடக்கு முறையால் கால்முறிந்து, கையொடிந்து, மண்டை நொறுங்கியவர்களின் எண்ணிக்கை பல்லாயிரக்கணக் கில் வளர்ந்து கொண்டிருந்தது. வேதாரணியத்தில் புளியஞ் சிம்புகளால் அடித்த அடி தொண்டர்களின் உடலிலிருந்து குருதியைக் கசியச் செய்ததோடு, பார்ப் போரின் கண்களிலிருந்தும் அதனை வடியச் செய்தது. சிலவிடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடை பெற்றன. இவ்வளவு கடுமையான அடக்கு முறைகளை யும் தாங்கிக்கொண்டு சிறைபுகுந்தோர் எண்ணிக்கையோ ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டதாகும்.

இந்த மாபெரும் இயக்கத்தை அரசாங்கத்தாரால் அடக்கிவிட முடியவில்லை. பிறகு, மகாத்மா காந்தியை விடுதலை செய்து அவருடன் இராஜப்பிரதிநிதி லார்டு இர்வின் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். இதற்கு **'காந்தி-இர்வின் உடன்படிக்கை'** என்று பெயர். இதனால் ஏழைகள் இலவசமாய் உப்பு தயாரித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றனர்.

## நாற்பத்தெட்டாவது காங்கிரஸ்—1931

நாட்டில் உப்புப் போர் முடிந்ததும், இவ்வாண்டு காங்கிரஸ் கராச்சியில் கூடிற்று. **சர்தார் வல்லபாய் பட்டேல்** தலைமை தாங்கினர். கூர்ஜரத்தின் புகழ் பெற்ற வழக்கறிஞரான இவர், மகாத்மாவின் வலது கரம்போன்று இயங்கினர். இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் உதவிப் பிரதம மந்திரியாக இருந்தபோது இவரது நிர்வாகத் திறமை வெளியாயிற்று. பர்தோலி வரிகொடா இயக்கம் நடத்தி வெற்றிகண்ட வீரர் இவர் என்பதும் நீவிர் அறிந்ததே யாகும்.

இந்தக் காங்கிரஸில் மக்களின் அடிப்படை உரிமைகள் யாவை என்று தெளிவுபடுத்தப் பெற்றன. தேசீயக் கொடியும் உருவாயிற்று.

## 1932 முதல் 1934 வரை

வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்த மகாத்மா, அதன் நடவடிக்கைகள் பிடிக்காமல் இந்தியா திரும்பினர். நாடெங்கும் அடக்குமுறை தலைவிரித்தாடிற்று. இங்கிலையில் இங்கிலாந்தின் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டொனல்டு **வகுப்புத் தீர்ப்பு** மூலம் ஹரிஜனங்களை இந்து மதத்திலிருந்து பிரித்துவிடச் சூழ்ச்சி செய்தார். தனித்தொகுதித் தேர்தல் முறையை ஹரிஜனங்களுக்கு அளித்து, மாக்டொனல்டு தயாரித்திருந்த திட்டத்துக்கே வகுப்புத் தீர்ப்பு என்று பெயர்,

இந்தப் பெருந் தீமையை எதிர்த்து மகாத்மா காந்தி சாகும் வரை உண்ணுவிரத மேற்கொண்டதன் பயனுக, ஹரிஜனங்களின் மதிப்பு வாய்ந்த தலைவரான அம்பேத்கார் உள்ளிட்ட பல தலைவர்களும் கூடி, சாதி இந்துத்

தலைவர்களுடன் கலந்து ஓர்ஒப்பந்தம் செய்துகொண்டு, தனித் தொகுதி தேவையில்லையென ஆங்கிலேயர்களுக் கறிவித்துவிட்டனர். பூனாவுக்குச் சமீபமுள்ள எரவாடா கிராமத்தில் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டதால் இதற்கு **எரவாடா ஒப்பந்தம்** எனப் பெயர் வரலாயிற்று. இதற்குப் பின் மகாத்மா ஹரிஜன சேவையில் தம் முழு கவனத் தையும் செலுத்தலானார்.


இந்த ஆண்டுகளில் மகாத்மா காந்தி பலமுறை உண்ணாவிரத மேற்கொண்டார், தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருந்த சட்ட மறுப்பை ஒடுக்குவதில் சலிப்படைந்து விட்ட அரசாங்கம் மகாத்மா முதலிய அநேக தலைவர்களை விடுதலை செய்தது. சட்ட மறுப்பும் நிறுத்தப்பட்டது.

இங்கிலையில் டாக்டர் அன்சாரி, சத்தியமூர்த்தி ஆகியோர் சட்டசபைப் பிரவேசத்துக்காக சுயராஜ்யக் கட்சியை உயிர்ப்பித்தனர். காங்கிரஸும் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்ததால் சுயாராஜ்யக் கட்சி காங்கிர ஸுடன் கலந்து விட்டது.

நாட்டின் எல்லாப் போராட்டங்களிலும் பெரும் பங்கு கொண்டிருந்த தீவிரவாதிகளான ஜெயப்பிரகாஷ் நாராயண், யூசுப் மெஹர் அலி, அச்சுதபட்டவர்த்தன் முதலியோர் பாட்னாவில் ஒரு மகாநாட்டைக் கூட்டிச் சிறையில் உருவான "**காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி**" யைப் பகிரங்கப் படுத்தினர். சுதந்திரப் போராட்டத் தைத் தீவிரப்படுத்தவும், சுதந்திரமடைந்த நாட்டை எப்படி ஆள்வதெனவும், சிந்திக்கத் தொடங்கியது இக்கட்சி.

## நாற்பத்தொன்பதாவது காங்கிரஸ்—1934

இவ்வாண்டு காங்கிரஸ் பம்பாயில் கூடிற்று. **இராஜேந்திர பிரசாத்** தலைமை வகித்தார். இவர், மகாத்மா காந்தி காங்கிரஸோடு தொடர்பு கொண்ட காலத்திலிருந்து காங்கிரஸில் ஈடுபட்டவர்; அவர் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் பங்குகொண்டவர்; பீஹாரில் ஏற்பட்ட பூகம்பத்தின் போது இவர் மேற்கொண்ட நிவாரணவேலை சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய தொன்றாகும். இந்தியா சுதந்திரமடைந்தபின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் "ராஷ்ட்ரபதி" இவரேயாவர்.



இக் காங்கிரஸிற்குத் தலைமைவகித்து இவர் நிகழ்த்திய சொற்பொழிவில், "நம் நாட்டுச் சுதந்திரப்போரில் நாம் உபயோகிக்கும் சத்தியாக்கிரக ஆயுதம் அபூர்வமானது; நேரான பாதையை விட்டு விலகாமல் நமது போரைத் தொடர்ந்து நடத்தினால் வெற்றி நிச்சயம்" என்று கூறினார்.

கதர் கட்டுவோரே காங்கிரஸ் நிர்வாகக் குழுவின் தேர்தலுக்கு நிற்கலாமென்று ஸ்தாபன விதிகள் திருத்தப்பட்டன. மகாத்மா காந்தி இவ்வாண்டிலிருந்து காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருவதை நிறுத்திக்கொண்டார். நாட்டின் ஆக்கவேலைத் துறையில் ஈடுபடலானார். அதன் பயனாகக் கிராமக் கைத்தொழிற் சங்கம் நிறுவப்பட்டது. இவ்வாண்டு ஆச்சாரிய கிருபளானி காங்கிரஸின் பொதுச் செயலாளரானார்.

## கிராமக் கைத்தொழிற் சங்கம்

தொழிற்றேவி, தேவரெல்லாம் தொழுநல் தேவி,
தூயபழ முனிவர்மறைச் சொல்லாம் தேவி
எழிற்பாதம் போற்றியிங்கு தொழிலின் மார்க்கம்
எடுத்துரைப்பேன் யாவருமே கேளீர் ! கேளீர் !
எழில்வேண்டி வாழ்க்கையிலே இன்பம்வேண்டி
யாவருக்கும் சுகம்வேண்டித் தொழுதற் கொத்த
தொழில்செய்யும் தொழிலேநற் றொழிலாம் மற்றைத்
தொழிலெல்லாம் வெறுஞ்செயலாம் விழலாம் வீணும்.

—ச. து. சு. யோகி.

பொருளாதாரக் குறைபாடுகள் உண்டாவதற்கு மூலகாரணம் எந்திர உற்பத்தி என்பதே மகாத்மா காந்தியின் முடிவு. இந்த அடிப்படையில் உண்டானதுதான் கிராமக் கைத்தொழிற் சங்கம்.

நமது நாட்டில் இயற்கை, அவசியமான பொருள்களை வாரி இறைத்து வைத்திருக்கிறது. இயற்கைப் பொருள்களையும் நாட்டு மக்களையும் ஒன்றுசேர்க்கும் ஸ்தாபனமே இந்தச் சங்கம்.

1934-ம் ஆண்டு காங்கிரஸின் தீர்மானப்படி இச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. கதர் இயக்கம் வளர, இதர கிராமக் கைத் தொழில்களும் வளர வேண்டியது அவசியமாகும். இதுவே மகாத்மா காந்தியின் ஆசை: இவரது ஆசையே காங்கிரஸின் ஆக்கவேலையாயிற்று.

இச் சங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பு ஜே. சி. குமரப்பாவுக்குக் கிட்டியது. இவர் ஒரு சிறந்த தணிக்கை அதிகாரி; கணக்கற்று வந்துகொண்டிருந்த

வருவாயை உதறித் தள்ளிவிட்டுக் கூர்ஜர வித்தியா பீடத்தில் தொண்டாற்றியவர்; பொருளாதாரம், அரசியல், சமூகம் இவற்றைப்பற்றிய பல நூல்களை இயற்றிய மேதையுமாவார்.

மத்தியப் பிரதேசத்தின் வார்தா ஜில்லாவிலுள்ள ஒரு கிராமமான மகன்வாடியில் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் நிறுவப்பட்டுக் கிராம முன்னேற்றத் தொண்டில் ஈடுபட்டுள்ளது.

இச் சங்கம், நாட்டுத் தொழிற் கருவிகளைச் சீர்திருத்தியமைத்துப் பிரசுரங்கள், வெளியீடுகள் இவை மூலம் மிக அரிய தொண்டாற்றிவருகிறது; சிறந்த ஆராய்ச்சிகளிலும் இறங்கியிருக்கிறது. நசித்துகொண்டிருந்த சில கிராமக் கைத்தொழில்களுக்கு இதன்மூலம் புத்துயிர் ஊட்டப்படுகிறது.

**நெல் குத்தல்**

'பெரி பெரி' முதலிய வியாதிகளை உண்டாக்கும் 'மில் அரைவை' அரிசியைவிட, உடலுக்கு நலம் செய்யும் சத்து நிறைந்தது கைக்குத்தல் அரிசி என்பது, உணவுப் பொருள் ஆராய்ச்சியாளர் தீர்ப்பு ஆகும். இதைக் கருத்தில் வைத்துக்கொண்டு கைக்குத்தல் அரிசிக்கு வேண்டிய சாதனங்களைச் சங்கம் உதவி வருகிறது.

**தேனீ வளர்த்தல்**

இஃது ஓர் இலாபகரமான தொழில். பயிர்களுக்கு உரம் கொடுத்து அறுவடையைப் பெருக்குவதுமல்லாமல் இனிய தேனையும் அளிக்கும் தேனீக்கள் சிறந்த

தேசத் தொண்டர்கள். உணவுக்கும், மருந்துக்கும் உபயோகப்படும் தேன் 'குளுகோஸை' விட நனி சிறந்தது. தேனீக்கள் வளர்ப்பது, தேன் சேகரிப்பது, அதைப்பற்றிய முழு விவரங்களைக் கொடுத்துதவுவது ஆகிய இவை சங்க அலுவல்களாகும்.

**பனைவெல்ல உற்பத்தி**

பாரத நாட்டில் பனைமரம் இல்லாத இடமே இருக்கமுடியாது. தரிசு நிலங்கள், வயலின் வரப்புகள் முதலிய எங்கும் பனை மரங்களைப் பார்க்கிறோம். உடலுக்கவசியமான சத்து மலிந்துள்ள பனைவெல்ல உற்பத்திக்காகச் சங்கம் அரும்பாடு படுகிறது.

**இன்னும் பல தொழில்கள்**

காகிதம் செய்தல், தாவர எண்ணெய் உற்பத்தி, எண்ணெய் ஆட்டல், எண்ணெய் விளக்குகள் செய்தல், சோப்பு உற்பத்தி முதலிய பல துறைகளில் இச்சங்கம் வெற்றிபெற்றிருக்கிறது. தோல் பதனிடுதல், பால் பண்ணைகள் ஏற்படுத்துதல், பொத்தான் உற்பத்தி செய்தல் ஆகிய இவற்றில் வெற்றிகாணவும் இறங்கியுள்ளது.

**காட்சிச் சாலை**

'மகன்வாடி' ஓர் சிறந்த கண்காட்சிச் சாலையாகும். இதனுள் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று கதரின் வளர்ச்சியைக் குறிப்பது; மற்றொன்று இதர கைத்தொழில் முன்னேற்றங்களை விளக்கிக் காட்டுவது. இப் பிரிவுகளைத் தொழிற் கோயில்கள் எனலாம்.

**கிராமத் தொண்டர் வித்தியாலயம்**

*இங்கே ஊழியம் செய்யத் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது ; நாட்டுக்குப் புத்துயிர் கொடுக்கும் நிர்மாணத்திட்டம், கிராமச் சுகாதாரம், பொருளாதாரம் இவற்றைப்பற்றிப் போதிக்கப்படுகிறது இங்குப் பயிற்சிபெறும் தொண்டர்கள் சாதி, சமய வேற்றுமை நீங்கி நாடெங்கும் சென்று தொண்டாற்றுகின்றனர்.*

**ஐம்பது, ஐம்பத்தொன்றாவது காங்கிரஸ்–1936, 1937**

*இந்த இரு ஆண்டுகளில் இலட்சுமணபுரியிலும், பெயிஸ்பூரிலும் நடைபெற்ற இரண்டு மகாநாடுகளுக்கும்* **ஜவஹர்லால் நேருவே** *தலைமை வகித்தார்.*

"**1935-ம் ஆண்டு சட்டம்**" *என்ற பெயரால் இந்தியாவுக்கான ஒரு சீர்திருத்த சட்டத்தைப் பார்லிமெண்ட் நிறைவேற்றியதை ஐம்பதாவது காங்கிரஸ் கண்டித்தது. ஆயினும், அதன் அடிப்படையில் நடைபெறும் மாகாண சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதென முடிவுசெய்தது. அதன்பயனாகப் பெரும் பகுதியான மாகாணங்களில் அதிகப்படியான ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது. பின்னர் அகில இந்தியக் காங்கிரஸ் பொதுக் குழுவின் அங்கத்தினர்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களும் கூடிப் பதவியேற்கத் தீர்மானித்தனர். அதன் பயனாக எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன.*